# உமறுப் புலவர்
## தமிழ்மொழி நிலையம்

ஆண்டு மலர் 2024



Annual Magazine 2024

# UMAR PULAVAR
## Tamil Language Centre

# உள்ளடக்கம்

Content Page to be updated later


| | |
|---|---|
| உள்ளடக்கம் | 1 |
| நிலையப் பாடல் | 2 |
| நிலைய இலக்கும் தொலை இலக்கும் | 3 |
| நமது நிலைய வரலாறு | 4 |
| வாழ்த்துச் செய்தி | 14 |
| முகவுரை | 15 |
| நிலைய இயக்குநர்கள் | 16 |
| வகுப்பு நிழற்படங்கள் | 17 |
| தமிழ் வாழ்த்து | 28 |
| ஆசிரியர் உறுதிமொழி | 29 |
| மாணவர் நிகழ்வுகள் | 30 |
| ஒன்றுகூடல் நிகழ்வு | 31 |
| அறிமுக தினம் | 33 |
| பொங்கல் விழா | 35 |
| தேசியத் தமிழ்மொழி விருப்பப் பாடத்திட்டம் | 37 |
| இந்திய நிகழ்த்துக்கலை | 39 |
| தமிழ்மொழி கற்றல் விழா - உயர்நிலை 2 | 41 |
| சிகரம் தொடு – தன்முனைப்பு & கற்றல் முகாம் | 43 |
| நற்றமிழ் உரைக்களம் | 45 |
| தமிழ்மொழி கற்றல் விழா – தொடக்கநிலை 5 | 47 |
| உயர்நிலை ஒன்று உயர்தமிழ் வகுப்புகளுக்கான முகாம் | 49 |
| தமிழ் இலக்கிய அறிமுக நிகழ்வு | 51 |
| 47ஆம் ஆண்டு பரிசளிப்பு விழா | 53 |
| தமிழ்த் திருவிழா | 55 |
| தாய்மொழிகளுக்கான கருத்தரங்கு | 57 |
| வளமூட்டும் நடவடிக்கைகள் & தேர்விற்குப் பிந்தைய நடவடிக்கைகள் | 59 |
| நிறைநிலை மாணவர்களுக்கான விடைகொடு விழா | 61 |
| மாணவர் திறன் மேம்பாடு – பகிர்வுகளும் போட்டிகளும் | 63 |
| செயல்வழி விழுமியங்கள் திட்டம் | 65 |
| உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் கற்றல் பயணம் | 67 |
| தேசியத் தமிழ்மொழி விருப்பப் பாடத்திட்டம் – வெளிநாட்டுக் கற்றல் பயணம் | 71 |
| முன்னாள் மாணவர் சங்கம் | 73 |
| பெற்றோருக்கான பயிலரங்கமும் கற்றல் பயணமும் | 75 |
| ஆசிரியர் நிகழ்வுகள் | 76 |
| ஊழியர்கள் மேம்பாட்டுப் பயிற்சிகள் | 77 |
| ஆசிரியர் பணித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் | 79 |
| பணியாளர் நலன்குழு நடவடிக்கைகள் | 81 |
| பிரியா விடை | 85 |
| கல்வி அமைச்சின் சேவைக்கான விருதுகள் | 87 |
| எங்களுடன் இணைந்திருங்கள் | 88 |


# நிலையப் பாடல்

எங்கெங்கிருந்தோ வருகிறோம் - புது
எண்ணங்களிங்கே பெறுகிறோம்
மொழியோடு பண்பாடும்
கலையும் பயிலும் ஒரு களஞ்சியம்

உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையம் - தமிழ்
உயர்வு போற்றும் உன்னத நிலையம் - **(எங்கள்)**

உள்ளத்தனையது உயர்வு - அந்த
வள்ளுவன் சொல்லே அமுது
நாளுமே முழங்குவோம்
முன்னேறுவோம்!... முன்னேறுவோம்!... முன்னேறுவோம்... **(எங்கள்)**

ஒற்றுமை... நம்பிக்கை ...
எதையும் செய்வதில் தனித் திறமை ... அதில் புதுமை

ஆற்றலை ... பெருக்குவோம்
ஆயுள் முழுவதும் படித்திடுவோம் ... பகிர்ந்திடுவோம்

பெற்றோர் சமூக உறவினிலே - நாம்
இணைந்திருப்போம் பல வழியினிலே
இவையாவுமே எங்களின் ஐம்பெரும் பண்புகள்! **(உமறு)**

தமிழ்மொழி நிலையம்!
வளமையின் இதயம்!
உன்னத நிலையம்!
உன்னத நிலையம்!!

பாடலும் இசையும்

**முனைவர் எஸ்.பி. ஜெயராஜதாஸ் பாண்டியன்**

## UPTLC VALUES

| | | |
|---|---|---|
| Unity for teamwork | **U** | ஒற்றுமையே பலம் |
| Positivity for growth mindset | **P** | உள்ளத்தனையது உயர்வு |
| Tenacious to rise again | **T** | மீளுந்தன்மை |
| Love for Tamil Language | **L** | தமிழ்மொழியின்பால் பற்று |
| Care for others | **C** | பிறர்மீது அக்கறை |

## MISSION
குறிக்கோள்

**To provide Quality Tamil Language Education**

தரமான தமிழ்க்கல்வியை மாணவர்களுக்கு வழங்குதல்

## VISION
தொலைநோக்கு

**Active learners and Lifelong Users of Tamil Language**

தமிழ்மொழியைத் துடிப்புடன் கற்று வாழ்நாள் முழுவதும் பயன்படுத்துதல்

## MOTTO
நிலைய முழக்கவரி

**The limit of a man's achievement is his will!**

உள்ளத்தனையது உயர்வு



# நமது நிலைய வரலாறு
## History of our Language Centre

**1945** செயிண்ட் ஜார்ஜஸ் தமிழ்த் தொடக்கப் பள்ளி தனியாரால் தொடங்கப்பட்டது.

Establishment of St. George's Tamil Primary School.

**1948 - 1958** அரசினர் உதவி பெற்ற பள்ளியாகச் செயிண்ட் ஜார்ஜஸ் தமிழ்த் தொடக்கப்பள்ளி இயங்கி வந்தது.

St. George's Tamil Primary School functioned as a Government Aided School.

**1959** செயிண்ட் ஜார்ஜஸ் தமிழ்த் தொடக்கப் பள்ளி அரசினர் பள்ளியானது.

St. George's Tamil Primary School became a Government School.

**1960 - 1972** செயிண்ட் ஜார்ஜஸ் தமிழ்த் தொடக்கப்பள்ளி, ஆங்கில உயர்நிலைப் பள்ளிகளில் பயின்ற தமிழ் மாணவர்களுக்குத் தமிழ் மொழி நிலையமாகவும் விளங்கியது.

St. George's Tamil Primary School served as a Tamil Language Centre for students studying in English Medium Schools.

**1975** செயிண்ட் ஜார்ஜஸ் தமிழ்த் தொடக்கப்பள்ளி மூடப்பட்டு, முழுவதும் தமிழ் மொழி நிலையமாக இயங்கத் தொடங்கியது.

St. George's Tamil Primary School closed its doors as a Tamil Primary School and started to function fully as a Tamil Language Centre.

**1978** செயிண்ட் ஜார்ஜஸ் தமிழ் மொழி நிலையம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

St. George's Tamil Primary School was renamed as St. George's Tamil Language Centre.

**1982** கற்றல் கற்பித்தல் வசதியை முன்னிட்டு, செயிண்ட் ஜார்ஜஸ் தமிழ் மொழி நிலையம், பழைய பீட்டி உயர்நிலைப் பள்ளிக்கட்டடத்திற்கு இடம் மாறியது.

To facilitate a better teaching and learning environment, St. George's Tamil Language Centre was relocated to the former Beatty Secondary School's campus.

**1983** செயிண்ட் ஜார்ஜஸ் தமிழ்மொழி நிலையம், உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் எனப் பெயர் மாற்றம் கண்டது.

St. George's Tamil Language Centre was renamed as Umar Pulavar Tamil Language Centre (UPTLC).

**2001** கல்வி அமைச்சின் தமிழ் மொழி ஆய்வுக்குப்பின் மறுசீரமைக்கப்பட்ட உமறுப்புலவர் தமிழ் மொழி நிலையம் கற்றல் கற்பித்தல் வசதிகளை மேம்படுத்தியது. ஆகஸ்ட் 3 ஆம் தேதி, அன்றைய துணைப் பிரதமர் பேராசிரியர் எஸ். ஜெயக்குமார் அவர்கள் மறுசீரமைக்கப்பட்ட உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தைத் திறந்து வைத்து, இந்நிலையம் தேசிய தமிழ்மொழி வளமை நிலையமாகவும் இனிச் செயற்படும் என அறிவித்தார்.

After an extensive Mother Tongue Language Review by Ministry Of Education, UPTLC underwent facilities upgrading programme to better serve Teaching and Learning outcomes. On 3rd August, the upgraded premises were declared open by then-Deputy Prime Minister Prof S Jayakumar. He announced that UPTLC would also serve as a National Tamil Language Resource Centre for the appreciation of Tamil arts, literature and culture.

**2003** ஆம் ஆண்டில் திரு ஜெயராஜதாஸ் பாண்டியன் அவர்கள் நிலையத்தின் மேற்பார்வையாளராகப் பொறுப்பேற்றார்.

In 2003, Mr Jeyarajadas Pandian was appointed as the Centre Supervisor.

**2007** கற்றல் கற்பித்தலின் எதிர்காலத் தேவைகளைக் கருத்திற்கொண்டு கல்வி அமைச்சு, உமறுப்புலவர் தமிழ் மொழி நிலையத்திற்கெனத் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு புதிய கட்டடத்தைக் கட்டித்தர முடிவு செய்தது.

In review of the future needs of Teaching and Learning of Tamil Language in Singapore, Ministry of Education decided that a new improved building was necessary. Approval was obtained to build a new upgraded building.

**2009** உமறுப்புலவர் தமிழ் மொழி நிலையம் புதிய கட்டட நிர்மாணத்திற்காக விக்டோரியா சாலையில் உள்ள முன்னாள் ஹொங் வென் பள்ளி (Hong Wen School) கட்டடத்திற்குத் தற்காலிகமாக இடம் மாறியது.

UPTLC was temporarily relocated to the former campus of Hong Wen School in Victoria Street so that building works could commence at the current land.

**2010** பிப்ரவரி 11ஆம் தேதி அன்றைய வர்த்தக, தொழில்துறை மற்றும் கல்வி அமைச்சுக்கான மூத்த துணை அமைச்சர் திரு. எஸ்.ஈஸ்வரன் அவர்கள் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம், சிங்கப்பூர்த் தமிழாசிரியர்களுக்கான பணித்திறன் மேம்பாட்டகமாகவும் செயற்படும் என அறிவித்தார் .

On 11th February, then- Senior Minister of State for Trade & Industry and Education, Mr.S.Iswaran announced that UPTLC will also function as the training arm for Tamil Teachers.

**2011** உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் ஜூன் மாதம் 20ஆம் தேதி முதல், 2 பீட்டி சாலையில் உள்ள புதிய கட்டடத்தில் இயங்கத் தொடங்கியது. சிங்கப்பூர்த் தமிழ்கல்வி வரலாற்றில் இது ஒரு குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பதிவு.

On 20th June, UPTLC started to function in the new building at 2, Beatty Road. This milestone was a note-worthy historical significance in the history of Tamil education in Singapore.

## 2012

தமிழில் புதியதாக அறிமுகம் கண்ட தேசியத் தமிழ் மொழி விருப்பப் பாடத்திட்டத்தை நிலையம் பொறுப்பேற்று நடத்தத் தொடங்கியது. இப்பாடத்தை உயர்நிலைப் பள்ளிகளில் உயர்தமிழ் பயிலும் மாணவர்களும் தொடக்கக் கல்லூரிகளில் H2 தமிழும் தமிழிலக்கியமும் வழங்கும் மாணவர்களும் விருப்பப் பாடமாகத் தேர்ந்தெடுத்துப் பயில வாய்ப்பளிக்கப்பட்டது.

UPTLC introduced the National Elective Tamil Language Programme (NETP) and it was then the only institution which offered this programme to further stretch Tamil students who were doing well in their Mother Tongue. This programme was offered to students studying Higher Tamil Language and to Junior College students who had offered H2 Tamil Language & Literature.

புதிய வளாகத்தின் அதிகாரபூர்வத் திறப்புவிழா, 4 ஆகஸ்டு அன்று நடந்தேறியது. அன்றைய துணைப் பிரதமரும் நிதியமைச்சரும் மனிதவள அமைச்சருமான தர்மன் சண்முகரத்தினம், அன்றைய பிரதமர் அலுவலக அமைச்சரும் உள்துறை, தொழில் வர்த்தக அமைச்சுகளுக்கான இரண்டாம் அமைச்சருமான எஸ். ஈஸ்வரன் ஆகியோர் வளாகத்தைத் திறந்து வைத்தனர்.

UPTLC's new premises were officially opened by Tharman Shanmugaratnam (then-Deputy Prime Minister, Finance Minister and Minister for Manpower) and S. Iswaran (then-Minister at Prime Minister's Office and Second Minister for Home Affairs, and Trade and Industry).

சிங்கப்பூரின் ஒரே தமிழ்க்கல்வி மரபுடைமையகமும் அவ்வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது. சிங்கப்பூரில் தமிழ்க் கல்வி வரலாறு, உமறுப்புலவர் தமிழ் மொழி நிலைய வரலாறு, கல்வி வளர்ச்சியில் சமூக அமைப்புகளின் பங்களிப்பு, தமிழ்க் கல்வியில் கலைகளும் பண்பாடும் ஆகியவை தொடர்பான செய்திகளும் வரலாற்று ஆவணங்களும் அடங்கிய மரபுடைமையகம், திரு தர்மன் சண்முகரத்தினம் (அன்றைய துணைப் பிரதமர், நிதி அமைச்சர்), திரு எஸ்.ஈஸ்வரன் (அன்றைய பிரதமர் அலுவலக அமைச்சர், உள்துறை மற்றும் தொழில் வர்த்தக அமைச்சுகளுக்கான இரண்டாம் அமைச்சர்) ஆகியோரால் அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

The only Tamil Education Heritage Centre in Singapore was also opened at the UPTLC campus by Mr.Tharman Shanmugaratnam and Mr.S.Iswaran. The centre captures the history of Singapore's Tamil Teaching and Learning, UPTLC's prominent role in the Tamil teaching fraternity, the community's efforts and contributions in the Tamil Language arena in Singapore and showcase of rich history pertaining to Tamil Arts and Culture in the teaching and learning of Tamil Language in Singapore.

## 2014

ஜூலை மாதத்திலிருந்து தேசிய தமிழ் மொழி நிலையமாகவும் தேசிய தமிழ்மொழி வளமை நிலையமாகவும் மட்டுமே செயற்படத் தொடங்கியது. இதற்கு நிலையத்தின் புதிய மேற்பார்வையாளராகத் திரு அன்பரசு இராஜேந்திரன் பொறுப்பேற்றார். 2013—இல் தலைமை முதன்மை ஆசிரியராகப் பணி உயர்வு பெற்ற திரு எஸ்.பி ஜெயராஜதாஸ் பாண்டியன், தமிழாசிரியர்களுக்கான பணி மேம்பாட்டு நிலையத்திற்குப் பொறுப்பேற்றார்.

From June, UPTLC started functioning as a Language Centre and National Tamil Language Resource Centre. Mr.Anbarasu Rajendran, a vice principal from Teck Whye Secondary School took over the leadership as the Centre Supervisor UPTLC from Mr. SP. Jeyarajadas Pandian. Mr. Pandian became Principal Master Teacher in 2013, taking charge of Tamil Teachers' professional development wing.

தமிழ் புலவர்களில் தலைசிறந்தவரான திருவள்ளுவரின் சிலை திறப்பு விழா ஆகஸ்டு மாதம் 2ஆம் தேதி நடைபெற்றது. இச்சிலையைப் பாடக்கலைத்திட்ட வரைவு மேம்பாட்டுப் பிரிவின் இயக்குநர் திரு சிங் சேர்ன் வெய் நிலைய ஆலோசனைக் குழுத் தலைவர் முனைவர் சுப திண்ணப்பன் அவர்களும் இணைந்து அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தனர். இத்திறப்பு விழா நிலையத்தின் வரலாறு பதிவுபெற்ற ஒரு நிகழ்ச்சியாக அமைந்தது.

To further enhance the teaching and learning resources within UPTLC premises, the statue of Poet Thiruvalluvar was unveiled on 2nd August by Mr.Sng Chern Wei, Divisional Director, CPDD, MOE and Dr.SP.Thinappan, Chairman of UPTLC Advisory Committee.

## 2015

கல்வி அமைச்சு, உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் கூடுதல் மற்றும் முக்கியப் பொறுப்புகளின் அடிப்படையில் மேற்பார்வையாளர் என்ற பதவியின் பெயர் நிலைய இயக்குநராக மாற்றப்பட்டது.

In reviewing the job scope of the leadership at UPTLC, MOE re-designated the title of Supervisor to Centre Director.

## 2016

நிலையக் கற்றல் கற்பித்தல் மறு ஆய்வு செய்யப்பட்டு, தகவல் தொழில்நுட்பக் கூறுகள், மற்றும் செயல்வழிக் கற்றல் கூறுகளை உள்ளடக்கிய உத்தி முறைகளுக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. மேலும், தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டத்தின் வளர்ச்சியாக, நிலைய மாணவர்களுக்கெனப் பிரத்தியேகமாக 2.0 என்ற திட்டம் தொடங்கப்பட்டது. உயர்நிலை 3-இல் இலக்கியம் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்காகவும் தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத்தில் கூடுதல் மாணவர்கள் சேர்கைக்காகவும் இப்பாடம் உயர்தமிழ் மாணவர்களுக்காகப் பாட நேரத்திலேயே தொடங்கப்பட்டது.

UPTLC's Teaching and Learning processes were reviewed internally to rejuvenate the students' learning experiences. A more holistic approach was taken for teaching & learning at the Centre. ICT was leveraged upon to engage the students. Experiential learning pedagogies were also explored and adopted. As an extension of NETP, NETP 2.0 was introduced within curriculum time to benefit students studying in UPTLC.

## 2017

15- ஆம் தேதி டிசம்பர் அன்று தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டது. பூன்லே கார்டன் தொடக்கப் பள்ளியின் துணை முதல்வர் திருமதி கீதா ஆறுமுகம், உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் புதிய இயக்குநராகப் பணியமர்த்தப்பட்டார்.

On 15 Dec there was a change in leadership. Mdm Kitha Arumugam a Vice Principal of Boon Lay Garden Primary School was posted to UPTLC as the new Centre Director.



## 2018

முறையான மாற்றங்களுக்காகவும் மேம்பாட்டிற்காகவும் அடுத்தநிலை முன்னேற்றத்திற்காகவும் கற்றல் கற்பித்தல் உத்திமுறைத் திட்டங்கள் மறு ஆய்வு செய்யப்பட்டன. உத்திமுறைத் திட்டங்களின் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் நான்கு விழுமியங்கள் அடையாளம் காணப்பட்டன. குழுப்பணி, படைப்பாக்கம், நேர்மை, மீளுந்தன்மை ஆகிய நான்கும் நிலையத்தின் விழுமியங்களாக முடிவு செய்யப்பட்டன. வாழ்நாள் முழுவதும் கற்றலுக்காக அனைவரையும் ஈடுபடுத்தி, ஊடாடும் அனுபவமிக்குத் தமிழ்மொழிக் கல்வியை வழங்குவதற்காக, உத்திமுறை ஒன்று செயற்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது.

21-ஆம் நூற்றாண்டுத்திறன், சுயகற்றல், சிந்தனைத் திறன், விழுமியங்கள் ஆகியவற்றை வெளிக்கொணர, தமிழ்மொழி கற்பிப்பதற்கான ஒரு முழுமையான அணுகுமுறை அமைக்கப்பெற்றது. சுய கற்றல் மற்றும் வாழ்நாள் கற்றலை வழிநடத்தும் மூன்றாவது ஆசிரியராகச் சுற்றுச்சூழலை உருவாக்குவதில் நிலையம் முனைந்தது.

The Strategic Plan was reviewed to bring systemic changes and improvements for the next level of progression. Four Strategic Thrusts were identified with key strategies to help attain the thrusts. Teamwork, Creativity, Integrity and Resilience were decided as the values at the Centre. Strategic Thrust 1 set to provide an Engaging, Interactive and Experiential Tamil Language Education for Lifelong Learning. A holistic approach to the teaching of the Tamil Language was set as one of the key focus with the infusion of the 21st CC, SEL, Thinking Skills and Values. The Centre embarked on creating the Environment as the 3rd Teacher to drive Self-directed and Lifelong Learning. Making Thinking Visible and Questioning Techniques were introduced to deepen the thinking skills in the students.

## 2019

வளமான தமிழ்மொழிச் சூழலை உருவாக்கவும், கற்பித்தல் மற்றும் கற்றல் சூழலை மேலும் மேம்படுத்தவும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மூலிகைச் செடிகளைச் சேர்த்து, மூலிகைத் தோட்டம் புதுப்பிக்கப்பட்டதுடன் சுயகற்றலை ஏதுவாக்க, சுய விளக்கம் அளிக்கக்கூடிய விரைவுத் தகவல் குறியீடு இணைக்கப்பட்டது. மூலிகைகள் மற்றும் அவற்றின் மருத்துவக் குணங்களை அறிந்துகொள்ள ஊக்குவிக்கும் வகையில், மூலிகைகள் பற்றிய சுவரொட்டிகள் மற்றும் விரைவுத் தகவல் குறியீட்டைக் கொண்ட மருத்துவக் குறிப்புகள் உருவாக்கப்பட்டன. முப்பது தமிழ்க் கவிஞர்களின் சுவரொட்டிகள், அவர்களின் பங்களிப்பினை எடுத்துக்காட்டி மீண்டும் வடிவமைக்கப்பட்டன. சுயகற்றலை எளிதாக்குவதற்காக, இவையும் விரைவுத் தகவல் குறியீட்டைக் அமைக்கப்பட்டன.

Projects were carried out to further enhance the teaching and learning ambience in order to create an authentic and enriched Tamil Language learning environment in line with the environment being the 3rd Teacher. The Herb garden was revamped with the inclusion of additional herb plants, installed with QR code to facilitate self-directed learning. Posters on herbs and the medicinal values with the QR Code were created to encourage the learning of herbs and their medicinal values. 30 Posters on the Tamil Poets were re-designed highlighting their key contributions to Tamil Language and were displayed at strategic location. These were also embedded with the QR code to facilitate independent learning.

## 2020

இந்த ஆண்டு கற்றல் கற்பித்தல் கோவிட்-19 தொற்றுநோய் காரணத்தால் அதன் வழக்கமான முறையிலிருந்து மாறியது. கற்றல் மற்றும் கற்பித்தல் தொடர்ந்து நடப்பதை உறுதி செய்வதற்காக மெய்ந்நிகர் மற்றும் மாணவர் கற்றல் தளங்களின் வழியாகத் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான பாடங்கள் வழங்கப்பட்டன. இது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு புதிய அனுபவமாக இருந்தது. வெளிப்போட்டிகள் மற்றும் நிகழ்வுகளில் மெய்ந்நிகர் வழியாக மாணவர்கள் பங்கேற்றனர். உள் மற்றும் வெளிப்புற நிகழ்வுகள் திட்டமிடப்பட்டு மெய்ந்நிகர் வழியாகச் செயற்படுத்தப்பட்டன. மாற்றங்களை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப நமது கடமைகளை நிறைவேற்றத் தயாராக இருக்க வேண்டும் என்பதை இந்த ஆண்டு அனைவருக்கும் கற்பித்திருக்கிறது.

This year teaching and learning changed from its usual norm due to Covid-19 pandemic. More ICT-based lessons via zoom and SLS were provided in order to ensure that teaching and learning continued. This became a new experience for both students and teachers. Students also participated in external competitions and events via zoom. Both the internal and external events were also planned and executed via online platform. This year had taught teachers and students to embrace changes with positivity and to be ever prepared for challenges that are thrown our way.



15-ஆம் தேதி டிசம்பர் 2020-ஆம் ஆண்டின் இறுதியில் மீண்டும் நிலையத் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டது. பாடக்கலைத்திட்ட வரைவு மேம்பாட்டுப் பிரிவின் தாய்மொழிகள் துறையின் துணை இயக்குநர், திருவாட்டி சாந்தி செல்லப்பன் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் இயக்குநராகப் பொறுப்பேற்றார்.

On 15 Dec 2020, there was a change in the leadership role at UPTLC. Mdm Santhi Sellappan, Deputy Director from Mother Tongue Languages Branch from Curriculum Planning & Development Division took over as the Centre Director of Umar Pulavar Tamil Language Centre.

## 2021

பாடக்கலைத்திட்ட வரைவு மேம்பாட்டுப் பிரிவுடன் இணைந்து, ஆசிரியர் பணியிணைப்புத் திட்டத்திலும் நிலையம் பங்காற்றத் தொடங்கியது. இந்தத் திட்டத்தின்வழி 3 வாரங்கள் நிலையத்திற்கு வந்த ஆசிரியருக்கு, நிலையம் பற்றிய தகவல்களும் செயற்பாடுகளும் அனுபவநிலையில் வழங்கப்பட்டன.

UPTLC offered to support CPDD with regard to Teacher Work Attachment (TWA) and a teacher came for TWA at UPTLC for 3 weeks.

நிலையம் இவ்வாண்டிலிருந்து முதன்முறையாகத் தேசிய கல்விக் கழகத்துடன் இணைந்து பயிற்சி ஆசிரியர்களுக்கு நேரடிக்கற்றல் கற்பித்தல் தொடர்பாகப் பல தகவல்களை வழங்குவதற்கும் மாணவ ஆசிரியர்கள் நேரடியாகக் கற்றலில் ஈடுபடுவதற்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது. ஆசிரியராக விருப்பம் தெரிவித்துக் கல்வியமைச்சுக்கு விண்ணப்பித்திருந்த மாணவர்களுக்கும் (interns) நிலையத்தில் இணைந்திருந்து பயனுள்ள கற்றலில் ஈடுபடுவதற்கு வாய்ப்பினை அமைத்துக் கொடுக்கும் முயற்சியில் நிலையம் ஈடுபட்டது.

UPTLC started the attachment programme for Trainee teachers in collaboration with NIE. Trainees were provided opportunity to be mentored by experienced teachers, to learn about teaching and learning in-depth as well as to teach lessons. UPTLC had also collaborated with CPDD in providing opportunity for interns attached to MTLB to have a stint in the Centre so that they would have a better understanding of the roles and responsibilities of teachers and to have dialogue session with PMTT.

நிலையம், தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக்குழுவுடன் இணைந்து மெய்ந்நிகர்வழி, பெற்றோர் கருத்தரங்கு, நிறைநிலை மாணவர்களுக்கான கற்றல் முகாம் ஆகியவற்றை ஏற்பாடு செய்து நடத்தியது.

UPTLC in collaboration with TLLPC conducted Parental Seminar and a Motivational cum Study camp for graduating students from the 12 TL Centres.

பாரதியார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டுத் தேசிய நூலக வாரியம், தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக்கு ஆகியவற்றின் ஆதரவோடு நிலையம் தொடக்கநிலை, உயர்நிலை, தொடக்கக் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்குப் போட்டிகளை ஏற்பாடு செய்து நடத்தியதோடு, பாரதியார் நூற்றாண்டு விழாவையும் முன்னின்று நடத்தியது.

UPTLC with the support of NLB and TLLPC, conducted a series of Literary competitions for primary, secondary and junior colleges in view of Bharathiyar Centennial Celebrations 2021.

மெய்ந்நிகர் தளத்தில் நடந்த தேசியநிலை நிகழ்வுகளில் மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களின் பங்கேற்பையும் அதிகரிக்கும் வகையில், தமிழ்த் திருவிழா, உயர்தமிழ் முகாம், தமிழ்மொழி கற்றல் விழா போன்ற நிகழ்வுகள் மேம்படுத்தப்பட்டுச் சிறப்பாக நடத்தப்பட்டன. மெய்ந்நிகர்வழியாக இந்நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டாலும் மாணவர்கள் செயற்வழிக் கற்றலில் ஈடுபடவேண்டும் என்ற நோக்கத்தில் நிலையம் இந்நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய பல சவால்களைச் சந்தித்தது. ஆயினும் அச்சவால்களைக் கடந்தும் மாணவர்களை இந்நிகழ்ச்சிகளில் செயற்வழி கற்றலில் ஈடுபடுத்தி வெற்றியும் கண்டது.

Tamilfest, Tamil Language Learning Festival Language and Cultural Camp were organised virtually and there was a significant increase in the number of student participants for all the national events organised online. The Centre faced great challenge in ensuring students experienced hands-on activities for the different programmes held online. Despite the challenges, the Centre had managed to provide enriching learning experience for the students.

மெய்ந்நிகர் தளத்தில் சுமார் 600 மாணவர்கள் கலந்துகொண்ட தமிழ்த் திருவிழா நிகழ்வில், உள்ளூர் கலைஞர்களோடு, தமிழ்நாட்டு நாட்டுப்புறக் கலைஞர்களையும் இணைத்து, மாணவர்களுக்கு நாட்டுப்புறக் கலைகளைக் கற்பிக்கும் வகையில் நிகழ்வுகள் செம்மைப்படுத்தப்பட்டுச் சிறப்புடன் நடத்தப்பட்டன.

Tamilfest which was conducted virtually saw aboout 600 primary & secondary students participating on-line. Besides, local artists, folk art experts and artists from India had participated in enriching students' experience in this event.

பெற்றோர் ஆதரவுக் குழுவுடன் இணைந்து நிலையம் பெற்றோர்களுக்கு 'வாங்க பழகலாம்' என்ற மாதாந்திர நிகழ்ச்சியை அறிமுகஞ்செய்தது. பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுடன் கலந்துகொண்டு அவர்களுக்கிடையே உள்ள உறவை வலுப்படுத்த இந்நிகழ்ச்சி உதவும் என்று நிலையம் திண்ணமாக நம்பியது.

The Centre collaborated with its Parent Support group to organise a monthly programme titled "Let's engage". It encouraged the parents to participate in this programme with their children so that they can enhance their relation and be effective in engaging them.

முன்னாள் மாணவர் சங்கத்திற்குப் புத்துயிர் தந்து குழுவினர்கள் நிலையத்துடன் இணைக்கப்பட்டனர். நிறைநிலை மாணவர்களுக்கான விடைகொடு விழா, பாரதியார் நூற்றாண்டு விழா போன்றவற்றில் அவர்கள் பங்கேற்றனர்.

Alumni was re-activated by reaching out to the members. The Centre wanted to engage them so they could contribute actively. The members were engaged via homecoming during the Graduation ceremony. They were also involved in the Bharathiyaar centennial celebration.

மாணவர்கள் வாழ்நாள் முழுவதும் துடிப்புடன் தமிழைக் கற்று, தமிழ்மொழிக்காகவும் சமுதாய மேம்பாட்டுக்காகவும் தங்களுடைய பங்கினை ஆற்றும் உயர்ந்த மனிதர்களாக உருவாகுவதற்கு அவர்களின் மொழியாற்றலை வளர்ப்பதோடு அவர்களின் தலைமைத்துவப் பண்புகளையும் வாழ்க்கை திறன்களையும் வளர்க்கவேண்டும் என்பதில் நிலையம் முனைப்பாகச் செயற்படுகின்றது.

நிலையம் சிண்டாவுடன் இணைந்து மாணவர்களுக்குச் செயற்வழி விழுமியத்தை மேற்கொள்வதற்கு வாய்ப்பை அமைத்துக்கொடுத்தது. பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புப் பைகளில் நிலைய மாணவர்கள் வடிவமைத்த வாழ்த்தட்டை சேர்க்கப்பட்டது. வாழ்த்தட்டை வடிவமைத்ததோடு மாணவர்கள் பிறர்மீது அக்கறை காட்டும் பண்பை வளர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டது.

The Centre collaborated with SINDA to provide opportunity for the students to participate in Values-in-action. They were involved in designing a greeting card that was printed and placed in the goody bags given to low-income families during Deepavali. Through this experience, they were provided the opportunity to learn about the importance of caring for others and showing empathy.

மாணவர்களின் திறமைகளை வெளிகொணர பல வாய்ப்புகள் அமைத்துத் தரப்படுகின்றன. இவ்வாண்டு 50-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பற்பல போட்டிகளில் பங்குபெற்று சிறந்ததொரு அனுபவத்தைப் பெற்றார்கள்.

The Centre aims to inculcate in students a life-long love for actively learning Tamil and to develop them into cultural transmitters and to be active contributors in the community. To achieve this vision, the Centre pays equal attention in developing the leadership and life-skills of the students while developing their language proficiency.

Students are also provided many opportunities to develop their talents. They are encouraged to participate in various competitions. About 50 students participated in competitions this year and gained valuable life experiences.

## 2022

கோவிட் பெருந்தொற்றுப் பரவல் பெரும்பாலும் கட்டுக்குள் வந்து இயல்பு நிலை திரும்பி இருந்ததால் ஜனவரி மாதம் ஆண்டின் முதல் நிகழ்வான பொங்கல் திருவிழா, சில பாதுகாப்பு நடைமுறைகளோடு நிலையத்தில் நேரடியாகக் கொண்டாடப்பட்டது. முதன்மை ஆசிரியர் மாணவர்களிடத்தில் பொங்கல் கொணடாட்டத்தின் சிறப்பை விளக்கியதுடன் இக்கொண்டாட்டத்தில் பொதிந்திருக்கும் பண்பாட்டுக்கூறுகளையும் அறிவியல் விளக்கங்களையும் மாணவர்களுடன் பகிர்ந்துகொண்டார். பொங்கல் கொண்டாட்டத்துடன் வகுப்புகளுக்கிடையிலான போட்டிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மாணவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் பொங்கல் வைத்து பல நடவடிக்கைகளிலும் பங்குபெற்றனர்.

The covid pandemic became endemic and many restrictions were lifted. Life was returning to normalcy. After a period of 2 years, the Centre was able to organise the Pongal celebration with certain guidelines so that the students could have an experiential learning. Master Teacher was invited to share the significance of Pongal celebration with the students. He also shared the Cultural and Scientific significance of Pongal with the students. Many activities were arranged for the students along with competitions between the classes. The students participated enthusiastically and actively in the programme.



பிப்ரவரி மாதம் தேசியக் கல்வி கழகத்தின் மாணவ ஆசிரியர்கள் 29 பேர் நிலையத்திற்கு வந்து நிலையத்தின் கற்றல் கற்பித்தல் பற்றி அறிந்துகொண்டனர். அதன் தொடர் நடவடிக்கையாக 12 மாணவ ஆசிரியர்கள், நிலைய ஆசிரியர்களின் வகுப்பறை கற்றல் கற்பித்தலைக் கண்டு நேரடி அனுபவம் பெற்றதோடு ஆசிரியர்களின் துணையுடன் வகுப்பறை கற்பித்தலிலும் ஈடுபட்டனர்.

On February, 29 student teachers from the National Institute of Education made a visit to UPTLC to experience classroom learning. As a follow-up 12 Student Teachers were attached to the Centre. They were matched to teacher mentors to delve deeper into teaching and learning. They were provided opportunity to do classroom observation as well as to plan and teach a class with the mentor's guidance.

உயர்நிலை 3, 4-இல் கூடுதலான மாணவர்கள் இலக்கியப் பாடத்தைத் தேர்ந்தெடுத்துப் படிப்பதற்கு ஊக்குவிக்கும் நோக்கில் உயர்நிலை 1, 2 மாணவர்களுக்கு இலக்கிய பாடத்திட்ட அறிமுகம் நடத்தப்பெற்றது.

With the intention of encouraging more Secondary 3 & 4 students to take up Literature as a subject, Literature Outreach Programme was introduced to the Secondary 1& 2 as well.

இவ்வாண்டு இரண்டு ஆசிரியர்கள், ஆசிரியர் மேம்பாட்டகத்தோடு இணைந்து தேசிய நிலையில் பகிர்வுகளை நடத்தியுள்ளனர். மற்றும் இரண்டு ஆசிரியர்கள் நிலையத்தைப் பிரதிநிதித்துப் பாடக்கலைத்திட்ட வரைவு மேம்பாட்டுப் பிரிவு ஏற்பாடு செய்திருந்த பயிலரங்கில் இலக்கியப் பாடம் பற்றிய கற்றல் கற்பித்தல் முறைகளைப் பகிர்ந்துகொண்டனர்.

2 of the Centre teachers had the opportunity to collaborate with MTTs to share at the National Teachers' sharing session. 2 of the teachers had shared on teaching and learning of Tamil Literature at a sharing session organised by CPDD.

நிலையத்திற்குப் புதிதாக வந்துசேர்ந்த மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கான அறிமுக தினம், நிறைநிலை மாணவர்களுக்கான தமிழும் உங்கள் பிள்ளையும் ஆகிய நிலைய நிகழ்வுகள் திட்டமிட்டபடி மெய்ந்நிகர்வழியாக நடத்தேறின.

Orientation Day was successfully held to welcome the new students and their parents to the centre. Tamil and your child programme was also conducted for graduating students and their parents as planned. Both events were conducted via zoom.

தேசிய நிலையில் நடத்தப்பெறும் நிலையத்தின் வருடாந்திர நிகழ்வுகளான தொடக்கநிலை 5, உயர்நிலை 2 மாணவர்களுக்கான தமிழ்மொழி கற்றல் விழா, உயர்நிலை 4 விரைவு, 5 வழக்கம் மாணவர்களுக்கான கற்றல் முகாம், ஆகியவை மெய்ந்நிகர் நிலையிலேயே இவ்வாண்டும் சிறப்பாக நடந்தேறின. உயர்நிலை 1 மாணவர்களுக்கான உயர்தமிழ் முகாமும் நேரடியாக நடந்தேறியது.

Tamil Language Learning Festival for Sec 2 and P5, Motivational Camp cum study camp were conducted via zoom. The Sec one HTL camp was conducted face to face.



இவ்வாண்டு புதுமையான கற்பித்தல் முறைகளை அடியொற்றி அதிநவீன மெய்ந்நிகர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அதாவது Interactive 360 வளத்தைப் பயன்படுத்தி, மூலிகைத் தோட்டம், நிலைய மரபுடைமையகம் போன்றவை மாணவர்களுக்கு மகிழ்வூட்டும் கற்றலாக அமையும் முயற்சியில் நிலையம் ஈடுபட்டது. இது கற்றல் கற்பித்தலுக்கும், கற்றல் பயணத்திற்கும் பெரிதும் உதவும் என்பது திண்ணம்.

Keeping in line with meeting the learning needs of the students, the Centre had ventured in developing digital resources using Interactive 360 tool. The Centre had developed a learning package using its herb garden and heritage centre to provide joyful and meaningful learning experience for the students and also to be used as resource for learning journeys.

தமிழ்த் திருவிழா, ஆகஸ்ட் 6ஆம் தேதி மிகச்சிறப்பாக நடந்தேறியது. இந்த நிகழ்வுக்கென்று தமிழ்நாட்டிலிருந்து சிறப்பாக வரவழைக்கப்பட்ட கலைஞர்களின் படைப்புகள் நிகழ்வுக்கு முத்தாய்ப்பாய் அமைந்தன. இந்நிகழ்வில் தொடக்கப் பள்ளியிலிருந்தும் உயர்நிலைப் பள்ளியிலிருந்தும் தொடக்கக் கல்லூரியிலிருந்தும் 600 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

Tamil Language Festival was held successfully on 6th August 2023. Artiste from Tamilnadu were specially invited to perform for Tamil Fest 2023. Their performance added authentic cultural flavour to the event in several ways. About 600 participants from primary, secondary and pre-university took part in this festival.

தமிழ்த் திருவிழாவில் முன்னாள் மாணவர் சங்க உறுப்பினர்கள் சுமார் 30 பேர் கலந்துகொண்டு நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற உறுதுணை புரிந்தனர்.

About 30 of Our UPTLC alumni students took part in Tamilfest to contribute in many ways to make the event a success.

தமிழ்த் திருவிழாவிற்காக வருகை புரிந்திருந்த வெளியூர் நாட்டுப்புற கலைஞர்களை அணுகி தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டத்திலும் தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டத்திலும் பயிலும் உயர்நிலை மற்றும் தொடக்கக்கல்லூரி மாணவர்களுக்காகச் சிறப்பாகத் தமிழர் மரபுக் கலைகளைப் பற்றிய ஒரு பயிலரங்கு நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழாசிரியர்களுக்கும் பாலர் பள்ளித் தமிழாசிரியர்களுக்கும் ஒரு பயிலரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வாறு கிடைக்கும் வாய்ப்புகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்வதில் நிலையம் முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றது.

Folk art experts who had facilitated at Tamilfest were approached to conduct a special workshop for Sec & JC students from the National Elective Tamil language programme and Tamil language Elective programme. Following this, another workshop was also organised for Teachers and Pre-school educators on Tamil folk arts. The Centre firmly believes in seizing all possible opportunities for the benefit of students and teachers.

தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக்குழுவின் நிதியாதரவில் நிலையம் பெற்றோருக்கான பயிலரங்கை மே மாதம் 23-ஆம் தேதி மெய்ந்நிகர்வழியாக நடத்தியது. அதில் சுமார் 100 பெற்றோர் கலந்துகொண்டனர். சென்னையிலிருந்து, மனநல மருத்துவர் சாலினி அவர்களும் அமெரிக்காவிலிருந்து தன்முனைப்புப் பேச்சாளர் மகேந்திரன் பெரியசாமி அவர்களும் கலந்துகொண்டு நல்லபல கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்றோர்களுக்கு வழங்கினர்.

The Centre had organised a Parents' Seminar on 23 May with the fund support from Tamil Language Learning & Promotion Committee. About 100 parents had participated in this event. Dr Shalini, a Psychiatrist from Chennai and a motivational speaker from America, Mr Mahendran Periyasamy facilitated the online workshop providing useful and informative insights. Parents raised many questions and the session was very informative. They had provided very positive feedback.

21 ஆம் நூற்றாண்டு / மின்னிலக்க யுகத்தின் மாணவர்களாகிய ஒவ்வொருவரும் மனிதநேயத்தோடு அக்கறைகொண்ட குடிமகனாகவும் சமூக மேம்பாட்டுக்குத் துடிப்புடன் பங்களிப்பவராகவும் விளங்கவேண்டும் என்பதற்காக நிலையம் மாணவர்களுக்குப் பல வாய்ப்புகளை அமைத்துக்கொடுத்தது. சிண்டா, தேசிய நூலக வாரியம், இந்திய மரபுடைமை நிலையம் ஆகியவற்றுடன் இணைந்து மாணவர்கள் தொண்டார்வலர்களாகச் செயற்படுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்தது. பல மாணவர்கள் அவற்றில் பங்குபெற்று பெரும் பயனடைந்தனர். அந்நிறுவனங்களிடமிருந்து பாராட்டையும் பெற்றனர்.

The Centre aims to develop its students to be a concerned citizens who contribute actively to the community while they are nurtured to be future ready. Hence, the Centre had collaborated with SINDA, NLB and IHC in providing opportunities for students to volunteer their time and effort in supporting their programmes. The students benefited immensely through these experiences and the organisations had positive feedback on their contributions.

கல்வி அமைச்சின் ஆசிரியர் சேர்க்கை (Recruitment) பிரிவுடன் இணைந்து நிலைய ஆசிரியர்கள் ஒளிக்காட்சிப் படைப்பு ஒன்றையும் மாதிரி பாடம் நடத்தும் முறையாக்கம் பற்றிய படைப்பு ஒன்றையும் உருவாக்கினர். இப்படைப்புகள் தமிழாசிரியர் பணியில் சேர விரும்புவோருக்கு ஒரு நல்ல தகவல் பெட்டகமாகவும் வழிகாட்டியாகவும் அமையும் என்பதே இதன் நோக்கமாகும்.

The Centre supported HR (Recruitment) to develop a video on what one should expect if he/she was interested to become a Tamil teacher. The video also contained an enactment of a lesson sample. The Centre teachers had developed the storyboard and had carried out the acting as well. This video serves as a useful resource for potential candidates interested in applying for Tamil teaching.






**2023** நமது நிலையத்தில் இவ்வாண்டு பிப்ரவரி 11-ஆம் தேதி புதிதாகச் சேர்ந்துள்ள அனைத்து மாணவர்களுக்கென 'அறிமுக தினம்' நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் புதிய மாணவர்கள் தங்கள் பெற்றோர்களுடன் கலந்துகொண்டார்கள். நம் நிலையத்தில் கற்றுக்கொடுக்கப்படும் பாடங்கள், கையாளப்படும் கற்றல் கற்பித்தல் முறைமைகள், மதிப்பீடு, கற்றல் வளங்கள் குறித்தெல்லாம் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டன. மேலும், இந்திய நிகழ்த்து கலை வகுப்புகள், நிலைய நிகழ்வுகள், மாணவர் நலன், சட்டத்திட்டங்கள், தேசிய தமிழ்மொழி விருப்பப் பாடத்திட்டம் ஆகியவை பற்றியும் விளக்கப்பட்டன. மாணவர்களும் அவர்தம் பெற்றோர்களும் தங்கள் ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெற்று மகிழ்வுடன் விடைபெற்றனர்.

நிலையத்தில் பயிலும் நிறைநிலை மாணவர்களுக்காக ஆண்டுதோறும் நடத்தப்பெற்றுவரும் தமிழும் உங்கள் பிள்ளையும் என்ற நிகழ்வு பிப்ரவரி 11-ஆம் தேதி மெய்ந்நிகர் வழியாக நடந்தேறியது. இதில் நிறைநிலை மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் இவ்வாண்டிற்கான தமிழ்மொழி, இலக்கியம் ஆகிய பாடங்களின் தேசியத் தேர்வு அமைப்புமுறைகளும், மாணவர்களும் பெற்றோர்களும் கருத்திற்கொள்ளவேண்டிய முக்கியத் தகவல்களும் வகுப்பாசிரியர்களால் விளக்கப்பட்டன. மேலும், மாணவர்கள் எதிர்நோக்கவிருக்கும் சவால்கள் பற்றியும், பெற்றோர் எந்தெந்த வகைகளில் தங்கள் பிள்ளைகளுக்கு ஆதரவாகவும் உதவியாகவும் இருக்கலாம் என்பது பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் பலம்-பலவீனம் பற்றி அறிந்து, முன்கூட்டியே ஆவன செய்யவேண்டுவது குறித்து அறிவதற்கும் கலந்துரையாடுவதற்கும் இந்நிகழ்வு வழிவகுத்தது எனலாம்.

தமிழர்த் திருநாளாம் பொங்கல் விழா இந்த ஆண்டு ஜனவரி மாதம் 30-ஆம் தேதி திங்கட்கிழமை உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பொங்கல் கொண்டாட்டத்தோடு எங்கள் நிலைய மெய்ந்நிகர்க் கற்றல் வளங்கள் வெளியீட்டு விழாவும் பிரம்மாண்ட முறையில் நிகழ்த்தப்பட்டது.

இந்த விழாவின் நோக்கம் தாய்மொழி சார்ந்த புலமை, தொழில்நுட்பம், மரபும் பண்பாடும் சார்ந்த கற்றல் விளைவுகளையும் அறிந்து அனுபவித்து மாணவர்கள் பயனடைய வேண்டும் என்பதே ஆகும். இந்திய மாணவர்கள் தங்கள் பாரம்பரியத்தைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகப் பொங்கல் விழாக் கொண்டாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விழாவில் கலந்துகொண்டதன் மூலம் மாணவர்களுக்கு அவர்களின் மொழி, கலாச்சாரம் பாரம்பரியத்தைப் போன்றவற்றைப் ஆழமாகப் புரிந்துகொள்ள வாய்ப்புக் கிட்டியது.

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் மெய்ந்நிகர்த் தொழில்நுட்பப் பாட வளங்கள் பாரம்பரிய கற்றல் கற்பித்தல் வகுப்பறை எல்லைகளைத் தாண்டி நவீனக் கற்றல் அனுபவங்களை அமைத்துக் கொடுக்கின்றன. எதிர்காலத் தயார்நிலையை மனத்திற்கொண்டு தமிழ்மொழியோடு கூடிய மரபுசார் கற்றலுக்கு ஏற்ற அர்த்தமுள்ள தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்றல் அனுபவங்களையும் புத்தாக்கமுறையில் வடிவமைத்து வழங்கிவருகின்றது. இவ்வகையில் மாணவர்களிடம் மொழி, பண்பாடு முதலியவற்றைப் புதிய பரிமாணத்தில் மாணவர்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில் நம் நிலையம் மெய்ந்நிகர்க் கற்றல் வளங்களைத் தமிழ்மொழியில் வடிவமைத்துள்ளது. நிலையத்தால் உருவாக்கப்பட்டுள்ள மெய்ந்நிகர் வளங்கள் (VR), 360° தொழில்நுட்ப வசதியை உள்ளடக்கிய வளங்கள், முப்பரிமாண அசைவுப்பட வளங்கள் முதலியவை செயல்வழிக் கற்றல், விளையாட்டுவழிக் கற்றல் முதலான அனுபவங்களை மாணவர்களுக்கு அமைத்துக் கொடுக்கும் ஈடுபாடுமிகுந்த கற்றல் அனுபவங்களுக்கு உகந்த களங்களாக விளங்குகின்றன.

தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழுவின் ஆதரவுடன், நம் நிலையம் பாடத்திட்டத்துடன் சீரமைக்கப்பட்ட ஆறு மெய்ந்நிகர் (VR) பாடத் தொகுப்புகளை உருவாக்கி நம் மணவர்களின் கற்றலுக்கு வழங்கியுள்ளது. பல்வேறு தமிழ்ப் பண்பாட்டு அம்சங்களைப் பற்றிய மாணவர்களின் புரிதலை மேம்படுத்தியுள்ளது. இதன்மூலம் சுமார் 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 2024-ஆம் ஆண்டில் "அதிவேக கற்றல் - பயணத்தில்" (Immersive Learning - On the Go) முதல் முயற்சியாக ஆசிரியர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் ஆதரவை வழங்குவதன்மூலம் பள்ளிகளுக்கு நேரடியாகச் சாதனங்களை வழங்குவதன் மூலம் VR வளங்களைக் கற்பித்தலில் தடையின்றி ஒருங்கிணைக்கிறது. தேசிய வளமையகமாகச் செயற்படும் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் பிற பள்ளிகளில் பயிலும் தமிழ் மாணவர்களும் அவர்தம் ஆசிரியர்களும் இத்தகைய வளங்களைப் பயன்படுத்திப் பயன்பெறும் நோக்கில் கற்றல் பயணங்களுக்கும் ஏற்பாடு செய்துவருகிறது.

தமிழ் இலக்கியப் பாடத்தை மாணவர்கள் அதிகமானோர் தேர்ந்தெடுத்துப் பயில்வதற்காக 'இலக்கிய அறிமுக நிகழ்வு' ஆகஸ்டு 19-ந் தேதி சனிக்கிழமை அன்று உயர்தமிழ் இரண்டாம் நிலையில் பயிலும் மாணவர்களுக்காகவும் பெற்றோர்களுக்காகவும் நடத்தப்பட்டது. இந்நிகழ்வின்மூலம் இலக்கியப் பாடத்தைப் பற்றிய கூடுதல் விளக்கங்களைப் பெற்றோர்கள் அறிந்துகொண்டனர்.

இலக்கியம் பயிலும் மாணவர்களுக்கான பிரயாணம் என்ற சிறுகதை இவ்வாண்டு மூப்பரிமாண அசைவூட்டும் ஒளிக்காட்சியாக வடிவமைக்கப்பட்டது. இது இலக்கிய வளங்களில் சிறப்புக்குரிய ஒன்றாகும். இலக்கியம் பயிலும் மாணவர்கள் அனைவரும் பயனடையும் வகையில் இலக்கியம் கற்பிக்கும் மற்ற 3 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் இவ்வளத்தை நிலையம் பகிர்ந்துகொண்டது.

உமறுப்புலவர் தமிழ்மொழி ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யும் உயர்நிலை இரண்டுக்கான மாணவர்களுக்குரிய தமிழ்மொழி கற்றல் விழா சிறப்பாகப் பிப்ரவரி மாதம் 25ஆம் தேதியும் தொடக்கநிலை 5 மாணவர்களுக்குரிய தமிழ்மொழி கற்றல் விழா, இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் தேதியும் நேரிடை நிகழ்வாகக் கோலாகலமாக நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் தொடக்கப்பள்ளியைச் சேர்ந்த 380 மாணவர்களும் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 300 மாணவர்களும் கலந்துகொண்டனர். மாணவர்கள் சித்திர வரைப்படங்களை உருவாக்கும் வழிமுறைகள் பற்றியும் கிராமியக் கைவினைப்பொருள்கள் செய்தல் நடவடிக்கையில் களிமண்ணைப் பயன்படுத்தி வீட்டுப் பொருள்களையும் மண் பொம்மைகளையும் மூங்கில்களைக் கொண்டு கூடைகளையும் மாணவர்கள் உருவாக்கினர். இந்த நடவடிக்கை மாணவர்களின் படைப்பாக்கத் திறனோடு கை ஒத்திசைவுத் திறன் மேம்பாட்டுக்கும் மிகவும் உறுதுணையாக இருந்தது. Connexions விளையாட்டை விளையாடி மாணவர்கள் புதிய கோணத்தில் சிந்திக்கவும், புதிர்களை வெவ்வேறு பட இணைப்புகள் மூலம் உருவாக்கவும் ஊக்குவிக்கப்பட்டனர். மாணவர்கள் கற்றுக்கொண்ட செய்யுள்களையும் பழமொழிகளையும் பட இணைப்புகள் கொண்டு தயாரித்துப் படைத்தனர்.

தேசிய வளமையகமாகச் செயலாற்றும் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் தமிழ்மொழி நிலையத்தில் பயிலும் தமிழ் மாணவர்கள் தேசிய நிலைத் தேர்வைச் சிறப்பாகக் கையாள்வதற்கும் தமிழ்மொழியைத் தன்னம்பிக்கையுடன் அணுகுவதற்கும் தேவையான உதவிகளை வழங்கும் நோக்கில் ‘சிகரம் தொடு’ என்னும் கற்றல் முகாமை இவ்வாண்டு தமிழ்மொழி நிலையங்களில் பயிலும் உயர்நிலை 4 விரைவுநிலை, உயர்நிலை 5 வழக்கம் ஏட்டுக்கல்வி, உயர்நிலை 3 உயர்தமிழ் ஆகிய நிலைகளில் பயிலும் மாணவர்களுக்காகக் கற்றல் முகாமை இரு நாட்கள் (மார்ச்சு மாதம் 25-ஆம் தேதி, ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி ஆகிய நாள்களில் நடைபெற்றன.) 12 நிலையங்களைச் சேர்ந்த சுமார் 230 மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். மேலும், மாணவர்களுக்குத் தன்முனைப்பை ஊட்டும் வகையில் தன்முனைப்பு அங்கமும் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யும் உயர்நிலை ஒன்று உயர்தமிழ் மாணவர்களுக்குரிய தமிழ்மொழி பண்பாட்டு முகாம், இவ்வாண்டு மே மாதம் 20ஆம் தேதி, சனிக்கிழமை, காலை 9மணிமுதல் மதியம் 1.30 மணிவரை நேரிடை நிகழ்வாக நடைபெற்றது. இம்முகாமின் நோக்கம் தாய்மொழி சார்ந்த புலமையையும் மரபும்ம் பண்பாடு சார்ந்த கற்றல் விளைவுகளையும் அறிந்து அனுபவித்து மாணவர்கள் பயன் அடைய வேண்டும் என்பதே ஆகும். 11 பள்ளிகளிலிருந்து 170 மாணவர்களும் ஆசிரியர்களும் பங்கெடுத்த இம்முகாமில் தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நடவடிக்கைகள் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டு நடத்தப்பட்டன. பல்வேறு நடவடிக்கைகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். இம்முகாமில் மாணவர்களுடைய பங்கேற்பு மிகச் சிறப்பாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையம் தேசிய தமிழ்மொழி வளமை நிலையமாகவும் செயல்பட்டு வருகிறது. நம் நிலையத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளில் ஒன்று நிலைய கற்றல் பயணம். சிங்கப்பூரில் உள்ள பாலர் பள்ளிகள் முதல் தொடக்கக் கல்லூரிகள் வரை அனைவரும் கற்றல் பயணத்தில் ஈடுபடும் வகையில் எங்கள் நிலைய கற்றல் பயணம் அமைந்திருக்கின்றது. சுமார் 500 மாணவர்கள் நமது நிலையத்திற்குக் கற்றல் பயணத்தை மேற்கொண்டிருந்தனர். மாணவர்கள் இந்தியப் பாரம்பரிய இசைக்கருவிகள் பற்றி அறிந்துகொள்ளவும் மூலிகைத் தோட்டத்தில் காணப்படும் மூலிகைச் செடிகளின் சிறப்புகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் மாணவர்கள் அறியவும் மெய்ந்நிகர் கற்றல் (VR) நடவடிக்கை மூலம் வேளாண்மையின் சிறப்பு பற்றி அறிவதோடு அறுவடை முறைகள், மஞ்சுவிரட்டு ஆகியவற்றின் செயல்பாடுகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், தாயக்கட்டை, பல்லாங்குழி, ஆடு புலியாட்டம், பம்பரம் போன்ற உள்ளரங்க விளையாட்டுகளையும் தமிழர்ப் பாரம்பரிய விளையாட்டான கபடி விளையாட்டையும் மாணவர்கள் அறிந்துகொண்டும் அவற்றைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பையும் வழங்கியது.



மாணவர்கள் குதூகலத்துடன் இந்நடவடிக்கைகளில் பங்குபெற்றதைப் பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக இருந்தது. இக்கற்றல் பயணம் மாணவர்களுக்கு இனிய பயணமாக அமைந்ததோடு ஒரு வேறுபட்ட கற்றல் பரிமாணத்தை அவர்களுக்குக் கொடுத்தது என்றே கூற வேண்டும்.

நிலையத்தின் முத்திரைத் திட்டமான தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டத்தில் (NETP) இணைந்துள்ள உயர்தமிழ் மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சிப் பாடங்கள் நேரடியாகவும் மெய்யந்நிகர் வழியாகவும் நடைபெற்றன. இவற்றில் உள்ளூர்த் திறனாளர்கள் மட்டுமன்றி வெளிநாட்டுக் கல்வியாளர்களும் பயிற்றுவிப்பாளர்களும் இணைந்திருந்து மாணவர்களுக்குச் சிறப்புப் பாடங்களை நடத்தி வந்தனர். இந்த ஆண்டு, பறையை இத்திட்டத்தின்வழி அறிமுகப்படுத்தியதுடன் என்.எஃப்.டி, மெட்டவெர்ஸ்வழிப் பண்பாட்டு வளர்த்தெடுப்பைப் பற்றியும் பாரம்பரிய உணவு, மரபணு தொடர்பான செய்திகள் பற்றியும் தமிழரின் குலமரபுக்குறியீடு முதல் நிறுவன மருத்துவமுறை வரையிலான தகவல்கள் பற்றியும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. விருப்பப்பாடத்தின் இறுதியில் மாணவர்களின் படைப்பும் இடம்பெற்றன. முதல் முறையாகத் தமிழ்விருப்பப் பாடத்தில் பயிலும் மாணவர்கள் தேசிய விருப்பப் பாடத்தில் பயிலும் மாணவர்களுடன் இணைந்து வெளிநாட்டு பயணத்தை நவம்பர் மாதத்தில் மேற்கொண்டனர். கடல் கடந்த கற்றல் பயணம் இன்பமாகவும் நலமாகவும் பயனுள்ளதாகவும் இடம்பெற்றது.

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் பெற்றோர்களுக்காகத் தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழுவின் ஆதரவுடன், ’பிள்ளைகளோடு பயணம் செய்வோம்’ என்ற பயிலரங்கு ஒன்றுக்கும் கற்றல் பயணம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்தது. பிள்ளைகளைப் புரிந்துகொண்டு அவர்களை நல்வழிப்படுத்தி நல்ல பிள்ளைகளாகவும் நற்குடிமக்களாகவும் வளர்க்கும் முறைகள் பற்றி ஆழமாக அறிந்து கொள்ளும் வகையிலும் தமிழ்மொழியின் மீது பிள்ளைகளுக்கு ஈடுபாட்டை வளர்க்க பெற்றோர்களுக்கு வழிகாட்டும் வகையிலும் இந்நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வு இரு பிரிவுகளாக நடத்தேறியது. முதல் நிகழ்வு ஏப்ரல் மாதம் 15-ஆம் தேதி அன்றும், அதன் தொடர்ச்சியாகப் அக்டோபர் 21 -ஆம் தேதி இரண்டாம் நிகழ்வாகப் ’பிள்ளைகளிடம் நம் பண்பாட்டைக் கொண்டு சேர்ப்போம்’ என்னும் தலைப்பில் பெற்றோருக்காகப் பயிலரங்கும் கற்றல் பயணமும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் பெற்றோர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டார்கள். கலந்துகொண்ட பெற்றோர்கள் இந்நிகழ்வுகள் தங்களுக்கு பயன்மிக்க வகையில் அமைந்ததாகக் கருத்துத் தெரிவித்தனர்.



**2024** தமிழர்த் திருநாளாம் பொங்கல் விழா இந்த ஆண்டு ஜனவரி மாதம் 15-ஆம் தேதி திங்கட்கிழமை உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பொங்கல் கொண்டாட்டத்தோடு எங்கள் நிலைய மெய்ந்நிகர்க் கற்றல் வளங்கள் வெளியீட்டு விழாவும் பிரம்மாண்ட முறையில் நிகழ்த்தப்பட்டது. இந்த விழாவின் நோக்கம் தாய்மொழி சார்ந்த புலமை, மரபும் பண்பாடும் சார்ந்த கற்றல் விளைவுகளையும் அறிந்து அனுபவித்து மாணவர்கள் பயனடைய வேண்டும் என்பதே ஆகும். நம் மாணவர்கள் தங்கள் பாரம்பரியத்தைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகப் பொங்கல் விழாக் கொண்டாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விழாவில் கலந்துகொண்டதன் மூலம் மாணவர்களுக்கு அவர்களின் மொழி, கலாச்சாரம் பாரம்பரியம் போன்றவற்றைப் ஆழமாகப் புரிந்துகொள்ள வாய்ப்புக் கிட்டியது.

நமது நிலையத்தில் இவ்வாண்டு பிப்ரவரி 03-ஆம் தேதி புதிதாகச் சேர்ந்துள்ள அனைத்து மாணவர்களுக்கென ‘அறிமுக தினம்’ நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் புதிய மாணவர்கள் தங்கள் பெற்றோர்களுடன் கலந்துகொண்டார்கள். நம் நிலையத்தில் கற்றுக்கொடுக்கப்படும் பாடங்கள், கையாளப்படும் கற்றல் கற்பித்தல் முறைமைகள், மதிப்பீடு, கற்றல் வளங்கள் குறித்தெல்லாம் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டன. மேலும், இந்திய நிகழ்த்து கலை வகுப்புகள், நிலைய நிகழ்வுகள், மாணவர் நலன், சட்டத்திட்டங்கள், தேசிய தமிழ்மொழி விருப்பப் பாடத்திட்டம் ஆகியவை பற்றியும் விளக்கப்பட்டன. மாணவர்களும் அவர்தம் பெற்றோர்களும் தங்கள் ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெற்று மகிழ்வுடன் விடைபெற்றனர்.

நிலையத்தில் பயிலும் நிறைநிலை மாணவர்களுக்காக ஆண்டுதோறும் நடத்தப்பெற்றுவரும் தமிழும் உங்கள் பிள்ளையும் என்ற நிகழ்வு பிப்ரவரி 03-ஆம் தேதி மெய்ந்நிகர் வழியாக நடந்தேறியது. இதில் நிறைநிலை மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் இவ்வாண்டிற்கான தமிழ்மொழி, இலக்கியம் ஆகிய பாடங்களின் தேசியத் தேர்வு அமைப்புமுறைகளும், மாணவர்களும் பெற்றோர்களும் கருத்திற்கொள்ளவேண்டிய முக்கியத் தகவல்களும் வகுப்பாசிரியர்களால் விளக்கப்பட்டன. மேலும், மாணவர்கள் எதிர்நோக்கவிருக்கும் சவால்கள் பற்றியும், பெற்றோர் எந்தெந்த வகைகளில் தங்கள் பிள்ளைகளுக்கு ஆதரவாகவும் உதவியாகவும் இருக்கலாம் என்பது பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் பலம்-பலவீனம் பற்றி அறிந்து, முன்கூட்டியே ஆவண செய்யவேண்டுவன குறித்து அறிவதற்கும் கலந்துரையாடுவதற்கும் இந்நிகழ்வு வழிவகுத்தது எனலாம்.

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யும் தமிழ்மொழி கற்றல் விழா, முதல் முறையாக வெள்ளிக்கிழமைகளில் மதியம் நடத்தப்பட்டது. பிப்ரவரி 24-ஆம் தேதி உயர்நிலை இரண்டு மாணவர்களுக்கும் ஏப்ரல் மாதம் 19-ஆம் தேதி தொடக்கநிலை 5 மாணவர்களுக்கும் நேரிடை நிகழ்வாக நடத்தப்பட்டது. இந்நிகழ்வுகளில் தொடக்கப்பள்ளியைச் சேர்ந்த 310 மாணவர்களும் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 285 மாணவர்களும் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

தேசிய வளமையகமாகச் செயலாற்றும் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் உயர்நிலை 4 விரைவுநிலை, உயர்நிலை 5 வழக்கம் ஏட்டுக்கல்வி, உயர்நிலை 3 உயர்தமிழ் ஆகிய நிலைகளில் பயிலும் மாணவர்களுக்காகவும் தமிழ்மொழி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்காவும் ‘சிகரம் தொடு’ என்னும் கற்றல் முகாமை இவ்வாண்டு 23-ஆம் தேதி மார்ச் நடத்தியது. இம்முகாம் மூலம் மாணவர்கள் தேர்வைச் சிறப்பாகக் கையாள்வதற்கும் தமிழ்மொழியைத் தன்னம்பிக்கையுடன் அணுகுவதற்கும் தேவையான உதவிகளை பெற்றனர். மேலும், தன்முனைப்பை ஊட்டும் வகையில் தன்முனைப்பு அங்கம் ஒன்றும் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் சுமார் 230 மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். முதல்முறையாக உயர்நிலை 4 உயர்தமிழ் பயிலும் மாணவர்களுக்காகவும் ‘சிகரம் தொடு’ என்னும் கற்றல் முகாம் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் பெற்றோர்களுக்காகத் தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழுவின் ஆதரவுடன், ஏப்ரல் மாதம் 20ஆம் தேதி பயிலரங்கு ஒன்றுக்கும் கற்றல் பயணம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்தது. ’பிள்ளைகள் வளர்ப்பு! பெற்றோர்களின் சிறப்பு! என்ற இந்நிகழ்வு, பிள்ளைகளைப் புரிந்துகொண்டு அவர்களை நல்வழிப்படுத்தி நல்ல பிள்ளைகளாகவும் நற்குடிமக்களாகவும் வளர்க்கும் முறைகள் பற்றி ஆழமாக அறிந்துகொள்ளும் வகையிலும் தமிழ்மொழியின் மீது பிள்ளைகளுக்கு ஈடுபாட்டை வளர்க்க பெற்றோர்களுக்கு வழிகாட்டும் வகையிலும் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் 55 பெற்றோர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். கலந்துகொண்ட பெற்றோர்கள் இந்நிகழ்வுகள் தங்களுக்கு பயன்மிக்க வகையில் அமைந்ததாகக் கருத்துத் தெரிவித்தனர்.

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யும் உயர்நிலை ஒன்று உயர்தமிழ் மாணவர்களுக்குரிய தமிழ்மொழி பண்பாட்டு முகாம், இவ்வாண்டு மே மாதம் 18ஆம் தேதி, நடைபெற்றது. இம்முகாமின் நோக்கம் தாய்மொழி சார்ந்த புலமையையும் மரபும் பண்பாடும் சார்ந்த கற்றல் விளைவுகளையும் தமிழ் பண்பாட்டின் செழுமையும் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டையும் மாணவர்கள் அறிந்து அனுபவித்து மாணவர்கள் பயன் அடைய வேண்டும் என்பதே ஆகும். இம்முகாமில் 100 மாணவர்கள் பங்கெடுத்தனர். தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நடவடிக்கைகள் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டு நடத்தப்பட்டன. பல்வேறு நடவடிக்கைகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

தமிழ் இலக்கியப் பாடத்தை மாணவர்கள் அதிகமானோர் தேர்ந்தெடுத்துப் பயில்வதற்காக ‘இலக்கிய அறிமுக நிகழ்வு’ ஜூலை 13-ஆம் தேதி உயர்தமிழ் இரண்டாம் நிலையில் பயிலும் மாணவர்களுக்காகவும் பெற்றோர்களுக்காகவும் நடத்தப்பட்டது. இந்நிகழ்வின்மூலம் இலக்கியப் பாடத்தைப் பற்றிய கூடுதல் விளக்கங்களைப் பெற்றோர்கள் அறிந்துகொண்டனர். இலக்கியப் பாடத்தைத் தேர்ந்தெடுத்துப் படிக்க மாணவர்களில் சிலர் ஆர்வம் காட்டியது வரவேற்கத்தக்கதாக அமைந்தது.

2024-ஆம் ஆண்டு உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் நிறை நிலை மாணவர்களுக்கு விடைகொடு விழா நேரிடையாக நவம்பர் 13-ஆம் நாளன்று மாலை 6.30 மணியிலிருந்து இரவு 8.30 மணிவரை மிகச் சிறப்பாகக் நடைபெற்றது. நிலைய இயக்குநரின் வாழ்த்துரை செய்தியுடன் தொடங்கி விழா, குதூகலமாக நடந்தேறியது. ஆணவர்கள் பழமையில் புதுமை காணும் வகைகள் ஆடை அலங்காரத்துடன் வந்து பங்கேற்றது அனைவரையும் கவர்ந்தது. விழாவில் நிறை நிலை மாணவர்கள் பல சுவாரசியமான விளையாட்டுகளை விளையாடி பரிசுகளையும் வென்றனர். விழாவில் ஆர்வத்துடன் கலந்துகொண்ட மாணவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டதோடு அறுசுவை விருந்தும் வழங்கப்பட்டது. நிறைநிலை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் வாழ்த்துத் தெரிவிக்கும் ஒளிக்காட்சி திரையிடப்பட்டதும் மாணவர்கள் பலத்த கரவொலி எழுப்பினர். நிலையத்தின் இந்திய நிகழ்த்துகலை வகுப்பு மாணவர்கள் தம் நடனத்தாலும் பாடலாலும் அனைவரையும் பரவசத்தில் ஆழ்த்தினர்.



உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் மெய்ந்நிகர்த் தொழில்நுட்பப் பாட வளங்கள் பாரம்பரிய கற்றல் கற்பித்தல் வகுப்பறை எல்லைகளைத் தாண்டி நவீனக் கற்றல் அனுபவங்களை அமைத்துக் கொடுக்கின்றன. எதிர்காலத் தயார்நிலையை மனத்திற்கொண்டு தமிழ்மொழியோடு கூடிய மரபுசார் கற்றலுக்கு ஏற்ற அர்த்தமுள்ள தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்றல் அனுபவங்களையும் புத்தாக்கமுறையில் வடிவமைத்து வழங்கிவருகின்றது. இவ்வகையில் மாணவர்களிடம் மொழி, பண்பாடு முதலியவற்றைப் புதிய பரிமாணத்தில் மாணவர்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில் நம் நிலையம் மெய்ந்நிகர்க் கற்றல் வளங்களைத் தமிழ்மொழியில் வடிவமைத்துள்ளது. நிலையத்தால் உருவாக்கப்பட்டுள்ள மெய்ந்நிகர் வளங்கள் (□□), 360□ தொழில்நுட்ப வசதியை உள்ளடக்கிய வளங்கள், முப்பரிமாண அசைவுப்பட வளங்கள் முதலியவை செயல்வழிக் கற்றல், விளையாட்டுவழிக் கற்றல் முதலான அனுபவங்களை மாணவர்களுக்கு அமைத்துக் கொடுக்கும் ஈடுபாடுமிகுந்த கற்றல் அனுபவங்களுக்கு உகந்த களங்களாக விளங்குகின்றன.

இவ்வாண்டு “அதிவேக கற்றல் - பயணத்தில்” (Immersive Learning - On the Go) முதல் முயற்சியாக ஆசிரியர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் ஆதரவை வழங்கியதன் மூலமும் பள்ளிகளுக்கு நேரடியாக VR சாதனங்களை வழங்கியது. தேசிய வளமையகமாகச் செயற்படும் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் பிற பள்ளிகளில் பயிலும் தமிழ் மாணவர்களும் அவர்தம் ஆசிரியர்களும் இத்தகைய வளங்களைப் பயன்படுத்திப் பயன்பெறும் நோக்கில் கற்றல் பயணங்களுக்கும் ஏற்பாடு செய்துவருகிறது.

ஆண்டுதோறும் நம் நிலையத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளில் ஒன்று நிலைய கற்றல் பயணம். உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் தேசிய தமிழ்மொழி வளமை நிலையமாகவும் செயல்பட்டு வருகிறதால் சிங்கப்பூரில் உள்ள அனைத்துத் தமிழ் மாணவர்களும் பயன் அடையும் வகையில் தமிழ்மொழி, பண்பாடு, கலை தொடர்பான பல நடவடிக்கைகள் கற்றல் பயணத்தில் வடிவமைக்கபட்டுள்ளன. கற்றல் பயணத்தின் நோக்கம் தமிழ்மொழி சார்ந்த புலமையையும், மரபு மற்றும் பண்பாடு சார்ந்த கற்றல் விளைவுகளை அறிந்து அனுபவித்து மாணவர்கள் பயன் அடைய வேண்டும் என்பதே ஆகும். சிங்கப்பூரில் உள்ள பாலர் பள்ளிகள் முதல் தொடக்கக் கல்லூரிகள் வரை அனைவரும் கற்றல் பயணத்தில் ஈடுபடும் வகையில் கற்றல் பயண நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டன. இவ்வாண்டு 400 மாணவர்கள் கற்றல் பயணத்திற்காக நம் நிலையத்திற்கு வருகைபுரிந்தனர். இக்கற்றல் பயணம், தமிழ்மொழி சிறப்புகளைக் கலையின் வாயிலாக மாணவர்களுக்கு உணர்த்தும் வண்ணம் புதுமையாக வடிவமைக்கப்பட்டிருந்தது. இக்கற்றல் பயணம் மாணவர்களுக்கு இனிய பயணமாக அமைந்து, ஒரு வேறுபட்ட கற்றல் பரிமாணத்தை அவர்களுக்குக் கொடுத்தது என்றே கூற வேண்டும்.

நிலையத்தின் முத்திரைத் திட்டமான தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டத்தில் (NETP) இணைந்துள்ள உயர்தமிழ் மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சிப் பாடங்கள் நேரடியாகவும் மெய்ந்நிகர் வழியாகவும் நடைபெற்றன. இவற்றில் உள்ளூர்த் திறனாளர்கள் மட்டுமன்றி வெளிநாட்டுக் கல்வியாளர்களும் பயிற்றுவிப்பாளர்களும் இணைந்திருந்து மாணவர்களுக்குச் சிறப்புப் பாடங்களை நடத்தி வந்தனர். இவ்வாண்டு இத்திட்டத்தின்வழி என்.எஃப்.டி, மெட்டவெர்ஸ்வழிப் பண்பாட்டு வளர்த்தெடுப்பைப் பற்றியும் பாரம்பரிய உணவு, மரபணு தொடர்பான செய்திகள் பற்றியும் தமிழரின் குலமரபுக்குறியீடு முதல் நிறுவன மருத்துவமுறை வரையிலான தகவல்கள் பற்றியும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. விருப்பப்பாடத்தின் இறுதியில் மாணவர்களின் படைப்பும் இடம்பெற்றன. தேசிய விருப்பப் பாடத்தில் பயிலும் 7 மாணவர்கள் முதல் முறையாகக் கடல் கடந்த கற்றல் பயணத்தை நவம்பர் மாதம் மேற்கொண்டனர். இப்பயணம் இன்பமாகவும் நலமாகவும் பயனுள்ளதாகவும் இடம்பெற்றது.

நமது கல்வியமைச்சின் நிதி ஆதரவோடு வார வாரம் நடத்தப்படும் இந்திய நிகழ்த்துகலை வகுப்புகளில் மாணவர்கள் மிகவும் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். நிகழ்த்துகலைகளில் பங்குபெறும் 115 மாணவர்களின் திறனை வளர்த்துக்கொள்வதற்கும் திறனை வெளிப்படுத்துவதற்கும் நிலையம் தொடர்ந்து வாய்ப்புகளை வழங்கிவருகின்றது. இவ்வாண்டு சமூக மன்றங்கள் ஏற்பாடு செய்த நிகழ்வுகளில் கலந்துகொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

ஆசிரியர்கள், காலத்சூழலுக்கு ஏற்றவாறு கற்றல் கற்பித்தலை மேம்படுத்திக்கொண்டு செல்வதற்கும், அவர்களின் பணித்திறன் மேம்பாட்டுக்கும் பல்வகை பயிற்சிகளும் பட்டறைகளும் ஆண்டுதோறும் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகின்றன. நம் நிலைய ஆசிரியர்கள் வாரந்தோறும் பணிமேம்பாட்டுக் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு, புதிய உத்திமுறைகளை வகுப்பறையில் பயன்படுத்திப் பார்ப்பதோடு முதன்மை ஆசிரியர்களை அழைத்து அவர்களின் பகிர்வின்வழி பயன்மிக்க கருத்தாடல்களிலும் ஈடுபடுகின்றனர்.இவ்வாண்டு இரண்டு ஆசிரியர்கள், ஆசிரியர் மேம்பாட்டகத்தோடு இணைந்து தேசிய நிலையில் ஆய்வு திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். நிலைய ஆசிரியர்களின் பணிமேம்பாட்டிற்காகப் பல முயற்சிகளை நம் நிலையம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்பது சிறப்பு.





# வாழ்த்துரை

## CONGRATULATORY MESSAGE

BY DR VENU

சிங்கப்பூரில் இயங்கிவரும் தமிழ்மொழி நிலையங்களுள் நீண்ட கால நற்சேவை ஆற்றும் பெருமை உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்திற்கு உண்டு. கடந்த நாற்பது ஆண்டுகளில் சிங்கப்பூரில் தமிழ் பயின்றுள்ள மாணவர்களுள் கணிசமான எண்ணிக்கையினர் இம்மொழி நிலையத்தில் தங்கள் தமிழ் ஆளுமையை வளர்த்துக்கொண்டவர்கள் என்று துணிந்துரைக்கலாம். பள்ளிகளில் தமிழ் பயில்வோர் பலருக்கும் கிடைக்காத வாய்ப்பும் வசதியும் இந்நிலைய மாணவர்கள் பெற்றுள்ளார்கள் என்பதை அனைவரும் ஒப்புவர். அவ்வாறு தமிழ் பயிலும் மாணவர்களுள் பலரும் தமிழ்மொழிமீது அளவற்ற ஈடுபாடும் பற்றுதலும் கொண்டு திகழ்வர் என்று அறுதியிட்டுக்கூறலாம்.

நவீன வசதிகளுடன் கூடிய கட்டடத்தில் நிறைந்துள்ள வளங்களும் பல சிறப்பு வசதிகள் கூடிய வகுப்பறைகளும் கற்றலுக்குத் தகுந்த புறச்சூழலை உருவாக்கி தந்துள்ளன. தமிழின் பெருமையைப் பறைசாற்றும் விதமாக அமையப்பெற்றிருக்கும் மூலிகைத் தோட்டம் வேறு எங்கும் காணவியலாத கற்றல் வளமாகும். தமிழர் போற்றும் அரிய தாவர வகைகள் மாணவர்களுக்குக் காட்சிப்பொருளாக மட்டுமன்றி அறிவுப் பெட்டகமாகவும் விளங்குகிறது. இனிமை வாய்ந்த இத்தமிழ்ச்சூழல் மாணவர்களை மொழியின்பால் ஈர்ப்பதில் வியப்பொன்றுமில்லை.

சிங்கப்பூரில் உள்ள தமிழாசிரியர்கள் பலரும் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைத்தின் வளங்களைப் பயன்படுத்திக்கொள்வது மகிழ்வுதரும் செய்தியாகும். இந்நிலையம் இந்திய சமூகத்திற்கும் தம் வளங்களைப் பகிர்ந்துகொள்கிறது என்பது நாம் அறிந்ததே. அண்மைய காலத்தில், தமிழ் வளர்க்கும் நோக்கில் தமிழ் அமைப்புகள் பலவும் பயன்மிக்க மொழி இலக்கிய நிகழ்ச்சிகளை இந்நிலைய வளாகத்தில் நடத்துகின்றன. அந்த அமைப்புகளுக்கு இடவசதி வழங்குவதோடு மட்டுமல்லாமல் தம்மால் இயன்ற அளவு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கும் மொழி நிலையத்தாரின் நற்சேவை பாராட்டுக்குரியது.

தமிழ்மொழி கற்றலுக்குப் பயன்மிகு நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடத்திவரும் இந்நிலையத்தாரின் முயற்சிகளுக்கு என் உளமார்ந்த பாராட்டுகள். தொடரட்டும் உங்கள் புத்தாக்க முயற்சிகள்; சிறக்கட்டும் சீரிய தமிழ்ப்பணி.

அன்புடன்.
த. வேணுகோபால்,

முனைவர் வேணுகோபால் தங்கராசு,
உதவி இயக்குநர் / முதன்மைச் சிறப்பாய்வாளர்
பாடக்கலைத்திட்டம் வரைவு மேம்பாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு
Assistant Director, Tamil Language / Master Specialist (ADTL/MS1)
Curriculum Planning and Development Devision
Ministry of Education.



# முகவுரை
## FOREWORD

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் தம் மாணவர்களை எதிர்காலத் தயார்நிலைக்கு ஆயத்தப்படுத்தும் நோக்கில் அதற்கேற்ற கல்வியைத் திறம்பட கற்பிப்பதோடு மாணவர்கள், தமிழ்மொழியைத் துடிப்புடன் கற்று வாழ்நாள் முழுவதும் அதனைப் பயன்படுத்துவதையும், விழுமியங்களைப் போற்றும் பண்புடையவர்களாக உருவாக்குவதையும் இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

மாணவர்களுக்குத் தமிழ்மொழியைப் பயிற்றுவித்தும் அவர்களது திறன்களை வளர்ப்பதற்கு வாய்ப்பளித்தும் பண்பாடு, இலக்கியம், கலைகள், விழுமியங்கள் ஆகியவற்றைத் திட்டமிட்டு வழங்குவதோடு மாணவர்களின் நலத்திலும் நிலையம் அக்கறை செலுத்தி வருகிறது. எதிர்காலத் தயார்நிலைக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்தும் நோக்கில் ஆசிரியர்களும் கற்றல் கற்பித்தலில் 21-ஆம் நூற்றாண்டு திறன்களை, மாணவர்களுக்கு ஏதுவான வகையில், சிங்கப்பூர் கற்பித்தல் முறைமையை அடியொற்றிக் கற்பித்து வருகின்றனர். மாணவர்களுக்குப் பயன்மிகுந்த இன்பமான கற்றல் அனுபவத்தைத் தரவேண்டும் என்ற குறிக்கோளில் நிலையம் கடப்பாடுகொண்டுள்ளது. இக்கற்றல் அனுபவத்தைக் காலத்தின் தேவைக்கும் மாற்றத்திற்கும் ஏற்ப வடிவமைத்து, ஒவ்வொரு ஆண்டும் மேம்படுத்தி வருகிறது நிலையம்.

தேசிய வளமையகமாகச் செயற்படும் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் தனது மாணவர்களுக்கு மட்டுமின்றி எல்லா தமிழ் மாணவர்களுக்கும் சிறந்த கற்றல் அனுபவத்தைத் வழங்கவேண்டும் என்ற நோக்கத்தில் தொடர்ந்து தேசிய நிலையில் பல நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு ஏற்பாடு செய்துவருகின்றது. பல பள்ளி மாணவர்களும் இதனால் பயனடைகிறார்கள். நிலையத்தின் முத்திரைத் திட்டங்களான இந்திய நிகழ்த்துகலையும் தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டமும் இங்கே குறிப்பிடத்தக்கன.
வாழ்க்கையில் அளப்பரியச் செயல்களை நம் மாணவர்கள் நிகழ்த்த வேண்டும். இந்த உலகமே அவர்களைத் திரும்பிப் பார்க்க வேண்டும். உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய மாணவர்கள் சிறந்த பண்புடையவர்களாகவும் மொழி ஆர்வலர்களாகவும் பண்பாட்டு தகைமையாளர்களாகவும் நாளைய தலைவர்களாகவும் வாகை சூடவேண்டும். நாட்டிற்கும் நிலையத்திற்கும் நற்பெயரை வாங்கித்தர வேண்டும். இதுவே எங்கள் நிலைய ஆசிரியர்களின் விருப்பமாகும். இந்த விருப்பம் ஈடேற நிலைய ஆசிரியர்கள் தொடர்ந்து செயற்படுவார்கள்.

நிலையத்தை வழிநடத்திய பல தலைவர்களின் உழைப்பை அடித்தளமாகக் கொண்டு தற்போதிய தலைமைத்துவம் தொடர்ந்து செயற்படும். மாணவர்கள் வாழ்நாள் முழுவதும் துடிப்புடன் தமிழைக் கற்று, தமிழ்மொழிக்காகவும் சமுதாய மேம்பாட்டுக்காகவும் தங்களுடைய பங்கினை ஆற்றும் உயர்ந்த மனிதர்களாக உருவாகுவதற்கு எங்கள் பங்கினைச் செவ்வனே ஆற்றிவருவோம்.

உள்ளத்தனையது உயர்வு
நன்றி ! வணக்கம்!

திருவாட்டி சாந்தி செல்லப்பன்
நிலைய இயக்குநர்
உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்

# நிலைய மேற்பார்வையாளர்கள் / நிலைய இயக்குநர்கள்



திரு. பா. பாலையா
Mr. P. Palaiyah
நிலைய மேற்பார்வையாளர்
Centre Supervisor
1960 - 1978



திரு. ஸ்டிவன் மாணிக்கம்
Mr. Steven Manickam
நிலைய மேற்பார்வையாளர்
Centre Supervisor
1978 - 1979



திரு. த. பாவாடைசாமி
Mr. T. Pavadaisamy
நிலைய மேற்பார்வையாளர்
Centre Supervisor
1979 - 1988



திரு. கோ. கலியபெருமாள்
Mr. G. Kaliyaperumal
நிலைய மேற்பார்வையாளர்
Centre Supervisor
1989 - 1990



திரு. அப்துல் காசிம்
Mr. Abdul Kassim
நிலைய மேற்பார்வையாளர்
Centre Supervisor
1990 - 2002



திரு. எஸ்.பி. ஜெயராஜதாஸ் பாண்டியன்
Dr. S.P. Jeyarajadas Pandian
நிலைய மேற்பார்வையாளர்
Centre Supervisor
2003 - ஜூன் 2014



திரு. அன்பரசு ராஜேந்திரன்
Mr. Anbarasu Rajendran
நிலைய இயக்குநர்
Centre Director
ஜூன் 2014 முதல் டிசம்பர் 2017 வரை



திருவாட்டி கீதா ஆறுமுகம்
Mdm. Kitha Arumugam
நிலைய இயக்குநர்
Centre Director
டிசம்பர் 2017 முதல் டிசம்பர் 2020



திருவாட்டி சாந்தி செல்லப்பன்
Mdm.Santhi Sellappan
நிலைய இயக்குநர்
Centre Director
டிசம்பர் 2020 முதல் தற்போதுவரை

## 4LIT



## 4HTL 2



## 4HTL 1



## 4NT



## 4TLB



## 3HTL 1



## 3Lit



## 3HTL 2



## 3HTL 3



## 3NA



## 3HTL 4



## 3EX



## 3NT



## 2TLB



## 2NT



## 2EX



## 2HT 1



## 1G2



## 2HT 2



## 1G3



## 1HT



# தமிழ் வாழ்த்து

வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!
வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!
வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!



**- மகாகவி பாரதியார்**

# ஆசிரியர் உறுதிமொழி

சிங்கப்பூர் ஆசிரியர்களாகிய நாங்கள்

எங்கள் குறிக்கோளில் உண்மையாக
நடந்துகொள்வதன்வழி

மாணவர்களிடம் காணப்படும் சிறப்பியல்புகளை
வெளிக்கொணரவும்

எங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும்
செயலாற்றுவதில்
முன்மாதிரியாக விளங்கவும்

எங்கள் மாணவர்கள் நல்ல, பயன்மிக்க
சிங்கப்பூர்க் குடிமக்களாகத் திகழ்வதற்கு வழிகாட்டவும்

நாங்கள் தொடர்ந்து கற்றுவருவதோடு
மாணவர்களிடையே கற்கும் உள்ளார்வத்தை வளர்க்கவும்

எங்கள் குறிக்கோளை அடைவதற்குப் பெற்றோர் மற்றும்
சமூகத்தினரின் நம்பிக்கையையும் ஆதரவையும்
ஒத்துழைப்பையும் பெறுவோம்

என உறுதி மேற்கொள்வோமாக.










# மாணவர் நிகழ்வுகள்
# Student Events

The Umar Pulavar Tamil Language Centre is committed to transcending conventional exam-oriented education by promoting innovation and introducing distinctive practices and programs. Its mission is to empower students with vital skills for the future while fostering a supportive and inspiring atmosphere for language acquisition. By enhancing students' confidence in their proficiency in Tamil, the Centre aims to cultivate a profound and enduring bond with the language and its culture. Additionally, it aspires to shape students into responsible, community-focused citizens who make positive contributions to society.



# ஒன்றுகூடல் நிகழ்வு



2024 ஜனவரி மாதத்தில், அனைத்து உயர்நிலை 1 முதல் உயர்நிலை 4 வரையிலான மாணவர்களுக்காக ஓர் ஒன்றுகூடல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழ்மொழிக் கல்வியை வலுப்படுத்துவதில் நமது உமறுப்புலவர் தமிழ்மொழிநிலையம் வகிக்கும் பங்கு பற்றிய விழிப்புணர்வை நம் மாணவர்களுக்கு ஏற்படுத்தும் வகையில் இது அமைந்திருந்தது. இந்த நிகழ்ச்சியில் நமது நிலையத்தின் வளமான வரலாறு, நோக்கம், தமிழ் மொழி மற்றும் அதன் கலாச்சாரத்தைப் பற்றிய வலுவான அடித்தளத்தை வளர்ப்பதற்கான தொடர்ச்சியான பங்களிப்புகள் ஆகியவை நமது நிலைய இயக்குநரால் முன்னிலைப்படுத்தப்பட்டன. இந்நிகழ்வில் நமது நிலைய ஆசிரியர்களும் மற்ற அலுவலகப் பணியாளர்களும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர். தமிழ் மற்றும் உயர்தமிழ், விருப்பப் பாடப்பிரிவுகள், வெவ்வேறு மாணவர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட கற்றல் பாதைகள் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை இந்த அமர்வு காட்சிப்படுத்தியது.

அதோடு 2024 ஆம் ஆண்டு முழுவதும் நடத்தப்படவிருக்கும் பொங்கல் விழா, தமிழ்மொழி கற்றல் விழா, உயர்நிலை ஒன்று உயர்தமிழ் மாணவர்களுக்கான முகாம், தமிழ்த் திருவிழா, நற்றமிழ் உரைக்களம் போன்ற பலதரப்பட்ட தமிழ்மொழி மற்றும் பண்பாடு சார்ந்த நிகழ்வுகளைப் பற்றி மாணவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. தமிழ் இலக்கிய வளமை, படைப்பாற்றலை வளர்க்கும் பயிலரங்குகள், வாழ்நாள் முழுவதும் மொழி மீது அன்பு செலுத்த ஊக்குவிக்கும் வாசிப்பு வட்டம் ஆகியவற்றின் மூலம் மாணவர்களை அவர்களின் வேருடன் இணைக்கும் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன.

விவாதம், சொற்பொழிவுப் பயிற்சி, மொழிப் போட்டிகள், முழுமையான கற்றலை அறிதல், சமூகப் பங்காளிகளுடன் ஒத்துழைத்தல் போன்ற பல்வேறு செறிவூட்டும் திட்டங்கள் பற்றியும் மாணவர்களுக்கு மேலும் விளக்கப்பட்டது. இவை அனைத்தும், மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த நமது நிலையம் வழங்குகின்ற அர்த்தமுள்ள தளங்களைப் பற்றி அவர்கள் அறிந்த கொள்ளும் வகையில் அமைந்திருந்தன. தமிழ்க் கற்பதில் பெருமை கொள்ளவும் வலுவான மொழித் திறன்களை வழங்கக்கூடிய வாழ்நாள் மதிப்பையும் வாழ்க்கைத்தொழில் பாதைகளையும் அங்கீகரிக்க மாணவர்களைத் தூண்டும் வகையில் இந்நிகழ்ச்சி நிறைவு பெற்றது. ஒட்டுமொத்தமாக, இந்த ஒன்றுகூடல் நிகழ்வு ஒரு தகவல் சேகரிப்பு அமர்வாக மட்டுமல்லாமல், ஊக்கமளிக்கும் கூட்டமாகவும் இருந்தது









# Assembly Programme

In January 2024, we organised a vibrant Assembly Programme for all Secondary 1 to Secondary 4 students to raise awareness about our centre's vital role in strengthening Tamil language education. The programme began with an engaging introduction to UPTLC, highlighting its rich history, mission, and ongoing contributions to nurturing a strong foundation in Tamil language and culture.

Students were introduced to all UPTLC teachers along with their areas of expertise, helping them understand the wide network of educators supporting their learning journey. The session also showcased the various subjects and programmes offered at the centre, including Tamil and Higher Tamil, elective modules, and customised learning pathways designed to cater to different student needs.

Beyond academics, the Assembly Programme placed strong emphasis on the cultural enrichment that UPTLC provides. Students were inspired by the wide range of Tamil cultural activities conducted throughout the year—such as Pongal, Tamil Fest, Learning Festival, HTL Camp and Student Forum. The centre also conducts programmes that connect students to their roots through Tamil literature appreciation, Literature enrichment, creative writing workshops, and reading circles that encourage a lifelong love for language.

Students were further briefed on the various enrichment programmes such as debate, oratorical training, language competitions, immersion learning, and collaborations with community partners, all of which provide meaningful platforms to showcase their talents. The programme concluded by motivating students to take pride in learning Tamil and to recognise the lifelong value and career pathways that strong language skills can offer. Overall, the assembly served not only as an informative session but also as an inspiring













## அறிமுக தினம்

நமது நிலையத்தில் இவ்வாண்டு பிப்ரவரி 03-ஆம் தேதி புதிதாகச் சேர்ந்துள்ள அனைத்து மாணவர்களுக்கென ‘அறிமுக தினம்’ நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் புதிய மாணவர்கள் தங்கள் பெற்றோர்களுடன் கலந்துகொண்டார்கள். நம் நிலையத்தில் கற்றுக்கொடுக்கப்படும் பாடங்கள், கையாளப்படும் கற்றல் கற்ப்பித்தல் முறைமைகள், கற்றல் வளங்கள், இந்திய நிகழ்த்து கலை வகுப்புகள் குறித்தெல்லாம் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டன. இந்நிகழ்வில் கலந்துகொண்ட பெற்றோர்கள் நம் நிலைய வளாகத்தைச் சுற்றிப் பார்த்தனர். மாணவர்களும் அவர்தம் பெற்றோர்களும் தங்கள் ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெற்று மகிழ்வுடன் விடைபெற்றனர்.







## Orientation Day

On 3 February 2024, we organised Orientation Day for our incoming cohort of students. During the session, students and their parents were given a detailed briefing on the subjects offered, their requirements, and the teaching pedagogies adopted at Umar Pulvar Tamil Language Centre. In addition, information on our flagship programmes the National Tamil Language Elective Programme and the Indian Performing Arts Programme was shared. The event concluded with an enriching Q&A segment, which addressed parents’ queries and provided greater clarity about the Centre’s programmes.







# பொங்கல் விழா

தமிழர் திருநாளாம் பொங்கல் விழா இந்த ஆண்டு நம் நிலையத்தில் ஜனவரி மாதம் 15ஆம் தேதி திங்கட்கிழமையும் 16ஆம் தேதி செவ்வாய்க்கிழமையும் என இரண்டு நாட்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 15ஆம் நாளன்று, உயர்நிலை ஒன்று முதல் உயர்நிலை நான்கு நிலைகளில் பயிலும் உயர்தமிழ் மாணவர்களுக்கான பொங்கல் விழா நடந்ததேறியது. 16ஆம் நாளன்று, உயர்நிலை ஒன்று முதல் உயர்நிலை நான்கு நிலைகளில் பயிலும் மற்ற மாணவர்களுக்கான பொங்கல் விழா நடந்தேறியது. பொங்கல் விழாவில் மூன்று தமிழ்மொழி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் கலந்துகொண்டது விழாவிற்கு மேலும் மெருகேற்றியது.

இந்த விழாவின் நோக்கம் மரபு மற்றும் பண்பாடு சார்ந்த கற்றல் விளைவுகளை அறிந்து அனுபவித்து மாணவர்கள் பயன் அடைய வேண்டும் என்பதே ஆகும். இந்திய மாணவர்கள் தங்கள் பாரம்பரியத்தைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகப் பொங்கல் விழாவினைக் கொண்டாடினர். இந்த அனுபவங்களைப் பெறுவதன் மூலம், மாணவர்கள் அவர்களின் மொழி, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை ஆழமாகப் புரிந்துகொள்ள முடியும்.

இந்நிகழ்வில் உயர்தமிழ் மாணவர்களும் மற்ற வகுப்பு மாணவர்களும் சுமார் 220 மாணவர்கள் கலந்துகொண்டனர். இவ்விழாவில் மாணவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கலந்துகொண்டனர். மாணவர்கள் நிலையத்தில் காலடி வைத்தவுடன் பொங்கலின் எழில்மிகு அலங்காரங்கள் அவர்களுக்கு இனிய வரவேற்பு அளித்தது. தோரணம், கரும்பு, வண்ண கோலங்கள் என எழில்மிகு அலங்காரங்களில் வண்ணமயமாக மின்னியது நம் கண்களுக்கு விருந்தாக அமைந்ததோடு பொங்கல் கொண்டாட்டமும் களைகட்டியது. நிலைய வளாகமெங்கும் பொங்கல் மணம் கமழும் பாடல்கள் இசைக்கப்பட்டு எங்கும் இன்பம் பொங்கியது.



இவ்விழாவில் முதல் அங்கமாக நம் நிலைய ஆசிரியை சீதா அவர்களின் உரை பொங்கலின் சிறப்பைப் பற்றியும் அதனைக் கொண்டாடுவதற்கான காரணத்தைப் பற்றியும் மாணவர்கள் ஆழமாகப் புரிந்துகொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது. அடுத்த அங்கமாக, பொங்கல் கொண்டாட்டத்தைப் பற்றிய இசை நாட்டியம் நாடகம் அரங்கேறியதை மாணவர்கள் மகிழ்ச்சியுடன் கண்டு களித்தனர்.

அதனைத் தொடர்ந்து மாணவர்கள் வகுப்பு ரீதியாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மாணவர்களுக்குத் தோரணம் கட்டுதல், பூ கட்டுதல், பொங்கல் வைத்தல், புள்ளிக்கோலம் போடுதல், பானை அலங்காரம் செய்தல் என ஐந்து வகையான நடவடிக்கைகளைக் கொண்ட பொங்கல் கண்காட்சிக்கூடம் அலங்காரப் போட்டி நடத்தப்பட்டன. பொங்கல் கண்காட்சிக்கூடம் அலங்காரப் போட்டி தமிழ் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டியதோடு மாணவர்களிடையே வலுவான பிணைப்பை ஏற்படுத்தி ஆரோக்கியமான போட்டித்தன்மைக்கும் வழிவகுத்தது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசுகளை நிலைய இயக்குனர் வழங்கினார். நமது பண்பாட்டு விழுமியங்களை மாணவர்களிடையே வேரூன்றச் செய்ய இது போன்ற விழாக்கள் ஒரு நல்ல தளமாக அமைகின்றன என்றே கூற வேண்டும்.










# Pongal Festival

The Tamil Harvest festival Pongal was celebrated with great enthusiasm at Umar Pulavar Tamil Language Centre on 15th and 16th January 2024. All students of Umar Pulavar Tamil Language Centre participated in the celebration on respective days. Invited student participants from various Tamil centres added to the richness and vibrancy of the event.

The Pongal festival was celebrated to help students learn about and appreciate their rich heritage. Through this experience, students gained a deeper understanding of their Mother Tongue, culture, and traditions.

Approximately 220 students, enthusiastically took part in the festival. Celebrations began ss soon as the students stepped into the premises, as they were warmly welcomed by beautiful Pongal decorations. The venue was adorned with traditional decorations such as 'Thoranam' (festive garlands), sugarcane, and colorful kolams (rangoli designs), creating a vibrant visual treat. The festive atmosphere was further enhanced by the cheerful Pongal songs that filled the air, adding to the joy of the occasion.



The event commenced with an insightful speech by our teacher, Ms. Seetha, who explained the significance of Pongal and the reasons behind its celebration. This provided students with a meaningful learning experience. Following this, students enjoyed a cultural performance, which included traditional music, dance, and drama that depicted the essence of Pongal.

Subsequently, students were divided into groups and actively participated in various hands-on activities. These included thoranam tying, flower garland making, cooking Pongal, drawing rangolis, and decorating pots. The campus certainly came to live as students enthusiastically prepared their Pongal Exhibit Booth which showcased their creativity. This event ignited enthusiasm among Tamil students, strengthened their bonds and encouraged healthy competition. This competition was an excellent platform for our students to learn the significance behind Pongal Celebrations.

Such cultural festivals serve as an important platform to instil and preserve our traditional values among students. It was truly a wonderful celebration that deepened students' appreciation of Tamil heritage while fostering a sense of cultural pride.



# தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டம்





உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் முத்திரைத் திட்டங்களுள் ஒன்றான தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டத்தில் 100 மாணவர்கள் இணைந்திருந்தனர். மொழி, இலக்கயம், பண்பாடு, வரலாறு, தொல்லியல், தொழில்நுட்பத்தில் மொழியும், பண்பாடும் எனப் பல களங்களை அடிப்படையாகக் கொண்ட சிறப்புப் பாடங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன. உயர்நிலை 1ல் உயர்தமிழ் படிக்கும் மாணவர்கள் முதல் உயர்நிலை 4ல் உயர்தமிழ் மாணவர்களும் தொடக்கக்கல்லூரியில் □2 – பிரிவில் படிக்கும் மாணவர்களும் இத்திட்டத்தில் இணைந்திருந்ததால் சிறப்புப் பாடங்களை அனுபவித்துக் கற்றுக்கொள்ளும்படி வடிவமைக்கப்பட்டிருந்தன. உள்நாட்டுப் பயிற்றுவிப்பாளர்களும் கட்டிடக் கலை வடிவமைப்பாளர், ஆய்வாளர் முனைவர் விக்கிரம கர்ணப் பழுவேட்டரையர், வானியல் அறிஞரும் தமிழர் தொன்மையை ஆய்வு செய்பவருமாகிய திரு பாலகிருஷ்ணன், சித்த மருத்துவர் முனைவர் செல்வசண்முகம், சித்த மருத்துவர் கு சிவராமன், நாடகத்தின் சிறப்பை விளக்கிப் புதிய நுட்பங்களைக் கற்றுக்கொடுத்த திரைப்பட இயக்குநர் திரு அ அனீஸ், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப அறிஞர் திரு வெங்கட்பாபு போன்ற தலைசிறந்த அறிஞர்களுடன் மாணவர்கள் கலந்துரையாடும் அனுபவத்தைப் பெற்றனர். பறை என்னும் தமிழிசைக் கருவி வாழ்வோடு இணைந்தது என்னும் உயரிய நோக்கைப் பறைசாற்றி வரும் திரு வேலுஆசான் அவர்கள் இந்தியாவிலிருந்து இணையம்வழி மாணவர்களுக்குப் பயிற்சி அளித்ததோடு இசைத்தும் காட்டினார். ஆஸ்திரேலியாவில் பறையிசையைப் பரப்பும் பண்பாட்டுத் தகைமையாளர் திரு லாரன்ஸ் அவர்கள் உலகளாவிய நிலையில் பறையிசையின் பரவல் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடினார். இறுதிச் சிறப்புப்பாட வேளையின்போது மாணவர்கள் தாங்கள் கற்றுக்கொண்டவற்றை அனைவர்முன்பும் படைத்துக்காட்டினர். ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டம் மாணவர்கள் மொழி. பண்பாடு, இலக்கியத்தை ஆழ்ந்து கற்பதற்குத் தொடர்ந்து துணைபுரிகிறது.





# NETP - National Elective Tamil Programme

One of the flagship programmes of the Umar Pulavar Tamil Language Centre is the National Elective Tamil Programme. This year a total of 100 students enrolled in this programme.Specially designed modules based on a wide range of fields, ranging from language, grammar, culture, history, archaeology and the role of technology in language and culture were offered.

Students from Higher Tamil at Upper Secondary levels (from Secondary 1 to Secondary 4) as well as those pursuing H2 Tamil in Junior College participated in this programme. The modules were thus crafted to provide an experiential learning journey for the students.





Along with local instructors, students had the opportunity to engage in discussions with eminent experts such as:

- Dr. Vikrama Karna Pazhuvettaraiyar, a building architecture designer and researcher,
- Mr. Balakrishnan, an astronomer and researcher in Tamil antiquity,
- Dr. Selvasanugam and Dr. G. Sivaraman, Siddha medicine practitioners,
- Film director Mr. A. Anees, who taught innovative techniques to highlight the uniqueness of Tamil theatre,
- Mr. Venkatbabu, an expert in Artificial Intelligence technologies.

Students also participated in online training sessions with Mr Velu Aasan, who is dedicated to promoting the parai, a traditional Tamil percussion instrument. They then engaged in a meaningful discussion with Mr Lawrence, a cultural expert from Australia who advocates for Parai music internationally. The final showcase reflected the rich learning that took place during this year's NETP classes. The NETP programme continues to deepen students' understanding of Tamil language, culture, and literature, laying a strong foundation for future-ready learners who may be inspired to pursue careers within the Tamil fraternity.









# இந்திய நிகழ்த்துகலை

2024 - ஆம் ஆண்டு, எங்கள் இந்திய நிகழ்த்துக்கலைத் திட்டத்திற்கு (IPAP) மேலும் ஒரு வண்ணமிகு, தாளமிகு, பெருமைமிகு ஆண்டாக அமைந்தது. இந்திய நிகழ்த்துகலைகளில் (IPAP) அனைத்து வகுப்புகளும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. நிகழ்த்துகலைகளில் பங்குபெறும் 110 மாணவர்களின் திறனை வளர்ப்பதற்கு நிலையம் தொடர்ந்து வாய்ப்புகளை வழங்கிவருகின்றது. சென்ற ஆண்டு தீபாவளி காலக்கட்டத்தில், சிண்டா தனது 'Project Give" என்னும் திட்டத்தின் கீழ், லிஷாவுடன் இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்வில் நம் மாணவர்கள் கோலாட்டம் ஆடியும் பறையிசைத்தும் தீபாவளி சந்தைக்கு வந்திருந்த பொதுமக்களை மகிழ்வித்தனர். இதில், வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகளும் சேர்ந்து ஆடி மகிழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 'அழகே தமிழே' என்ற நிகழ்ச்சியிலும் 'நானும் ஒரு படைப்பாளி' நிகழ்விலும் நமது மாணவர்கள் தத்தம் ஆடல் பாடல் திறன்களை வெளிக்கொணர்ந்தனர். இவ்வாறு மாணவர்களை மேடையேற்றுவதற்கு நமது நிலையம் பல வாய்ப்புகளைத் தொடர்ந்து ஏற்படுத்திக் கொடுத்து வருகிறது.

இவ்வாண்டு, முதன்முறையாக ஆட்டம் என்ற அமைப்பும், இந்திய மரபுடைமை நிலையமும் சிண்டா, நற்பணிப் பேரவை போன்ற அமைப்புகளுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த 'இந்திய மரபுடைமைக் கலை விழா 2024' என்ற தேசிய சாதனை நிகழ்ச்சியில், நம் இந்திய நிகழ்த்துகலை மாணவர்கள் கலந்துகொண்டனர். சிங்கப்பூர் சாதனை ஏட்டில் புதிய சாதனை படைத்தவர்களின் பட்டியலில் நமது நிலையத்தின் இந்திய நிகழ்த்துகலை மாணவர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளது.

இப்போது அனைவராலும் விரும்பப்படும் பறையிசைக் குழுவும் நமது நடனக்குழுவும் சேர்ந்து பிற பள்ளி விழாக்கள், பண்பாட்டுத் திருவிழாக்கள் மற்றும் சிங்கப்பூரின் பல சமூக நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று பார்வையாளர்களைக் கவர்ந்து வருகின்றன. நமது பறையிசைக்குழுவும் நடனக்குழுவும் யூஹுவா தொடக்கப்பள்ளியிலும் நன்சியாவ் தொடக்கப்பள்ளியிலும் நடைபெற்ற தீபாவளி விழாவில் பங்கேற்றனர். பிற இனத்தவரின் முன்னிலையில் நமது தமிழ்ப் பாரம்பரியக் கலைகளைப் படைத்துக்காட்டி அவர்களின் பாராட்டைப் பெற்றனர்.

கல்வி அமைச்சின் நிதி ஆதரவுடன் நடந்துவரும் இந்திய நிகழ்த்துக்கலை திட்டமானது மாணர்களிடத்தில் நமது பாரம்பரிய கலைத்திறன்களை வளர்த்து, நமது பாரம்பரியம் செழிக்க வைக்கும் ஒரு மேடையாக இருந்து வருகிறது.















# INDIAN PERFORMING ARTS PROGRAMME







The year 2024 was yet another colourful, rhythmic, and pride-filled year for our Indian Performing Arts Programme (IPAP). All classes under the programme were conducted successfully and the programme continued to provide consistent opportunities for the 110 participating students to hone their talents.

During the Deepavali season, as part of SINDA's Project Give initiative, our students, under the coordination of Lisha,delighted audiences with Kolattam and Parai drumming performances. A highlight of the event was the enthusiastic participation of foreign tourists, who joined in the festivities.

Our students also showcased their dance and musical talents in events such as Azhage Tamizhe and Naanum Oru Padaippali. Such events reflect the centre's commitment to continually creating opportunities for student growth and artistic expression.

For the first time this year, our centre collaborated with Atam, the Indian Heritage Centre, SINDA and the National Youth Achievement Award Council to organise the Indian Heritage Arts Festival 2024—a national record-setting event. Our Indian Performing Arts students, alongside other centre students, earned a place in the Singapore Book of Records for their remarkable achievement. From the powerful rhythms of the Parai ensemble to the graceful footwork of our dancers, every performance brought our heritage to life.

The Parai CCA, now a crowd favourite, captivated audiences at school celebrations, cultural festivals, and community events across Singapore. In addition, our Indian dancers and Parai students participated in the Deepavali celebration at Yuhua Primary School and Nan Chiau Primary School, where their performance earned high praise from the non-Indian crowd.

With the support of the Ministry of Education, the Indian Performing Arts Programme has been more than just a series of classes, it has been a platform for talent to bloom, for confidence to grow, and for heritage to flourish. In 2024, our students once again proved that they are not only performers but also true custodians of tradition.



# உயர்நிலை 2 மாணவர்களுக்கான தமிழ்மொழி கற்றல் விழா









உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யும் உயர்நிலை இரண்டு மாணவர்களுக்குரிய தமிழ்மொழி கற்றல் விழா, இவ்வாண்டு பிப்ரவரி மாதம் 24ஆம் தேதி, சனிக்கிழமை, காலை 8.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை நேரடி நிகழ்வாகக் கோலாகலமாக நடைபெற்றது. ]

இவ்வாண்டு புத்தம் புதிய அங்கமாகத் 'தமிழில் செயற்கை நுண்ணறிவு' என்ற நடவடிக்கை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நடவடிக்கையில் மாணவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் பயன்படுத்திச் செயற்கை நுண்ணறிவின் மூலம் (AI) படிமங்களை உருவாக்கும் வழிவகைகளை அறிந்துகொண்டனர். மேலும், ChatGPT போன்ற தொழில்நுட்பங்களில் தமிழ்மொழிப் பயன்பாடு குறித்த விவரங்களையும் அறிந்துகொண்டனர். இந்நடவடிக்கையின் வழி பெற்ற திறன்களைக்கொண்டு காமிக்ஸ் எனப்படும் சித்திரக்கதை மற்றும் விளக்கக்காட்சிகளை உருவாக்கிப் படைத்தனர். இந்த அனுபவம் புதுமையாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமைந்தது.

இவ்விழாவில் மேலும், 'மின்னியல் பொம்மலாட்டம்' என்ற நடவடிக்கையும் நடத்தப்பட்டது. சென்ற ஆண்டுகளில் இந்நடவடிக்கை அமோக வரவேற்பைப் பெற்றிருந்ததால் இவ்வாண்டும் இதே நடவடிக்கை நான்காம் ஆண்டாக மீண்டும் நடத்தப்பட்டது. இதில் மின்னியல் பொம்மலாட்டத்தை உருவாக்கும் வழிமுறைகள் பற்றிய நுணுக்கங்களை அறிந்துகொண்டனர்.

அடுத்து, மாணவர்கள் ஈடுபட்ட கிராமியக் கைவினைப்பொருள்கள் செய்தல் நடவடிக்கையில் தென்னங்கீற்றைப் பயன்படுத்திக் கூடைகளையும் களிமண்ணைக் கொண்டு தலையாட்டுப் பொம்மையையும் உருவாக்கினர். இந்த நடவடிக்கை மாணவர்களின் படைப்பாக்கத் திறனோடு கை ஒத்திசைவுத் திறன் மேம்பாட்டுக்கும் மிகவும் உறுதுணையாக இருந்தது.

மொத்தத்தில் இந்தத் தமிழ் மொழி கற்றல் விழா 2024 மாணவர்கள் பயனுள்ள திறன்களைக் கற்றுக்கொள்ளும் அரிய வாய்ப்பாக இருந்தது.





# Tamil Language Learning Festival - Secondary 2





On 24 February 2024, Secondary 2 students from various schools came to UPTLC for the Tamil Language Learning Festival (TLLF). Students took part in a series of creative activities that greatly boosted their morale and interest in Tamil.

A brand-new programme, AI in Tamil, was introduced. Participants from 22 secondary schools as well as JC/MI engaged in exciting sessions such as learning how to use ChatGPT, experimenting with prompts to generate images, and exploring how art content can be created with AI. They later applied these skills to produce comics and presentations, making the experience both innovative and meaningful.

The second activity, Digital Puppetry, continued its streak as the most popular programme for the past four years. Students were first introduced to the traditional art form of Bommalattam and viewed shadow puppets from the DakshinaChitra museum. They then used the InShot video editor in a hands-on activity that included creating their own animations, adding voice recordings, subtitles, and more. Participants were particularly challenged and excited when tasked with designing characters of the Sangam Era Kings.

The final activity, Village Handicrafts, gave students an opportunity to create their own traditional craft. This year, they worked on making Thalaiyaati Bommai (nodding dolls). The session proved especially satisfying, as students felt a strong sense of pride and accomplishment after completing their handcrafted products.



# நிறைநிலை மாணவர்களுக்குரிய ‘சிகரம் தொடு’ - தன்முனைப்பு, கற்றல் முகாம்





தேசிய வளமையமாக விளங்கும் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம், நிறைநிலை மாணவர்களுக்காக ஆண்டுதோறும் ‘சிகரம் தொடு’ என்னும் கற்றல் முகாமிற்கு ஏற்பாடு செய்துவருகிறது. நிறைநிலை மாணவர்கள் தேசிய நிலைத் தேர்வுகளைச் சிறப்பாக எதிர்கொள்ள துணைபுரிவதும், தமிழ்மொழியைத் தன்னம்பிக்கையுடன் அணுக வழிவகுப்பதும், தமிழ்மொழி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு உரிய ஆதரவு வழங்குவதும் இக்கற்றல் முகாமின் முக்கிய நோக்கங்களாகும். இம்முகாமில் உயர்நிலை 4 விரைவுநிலை, உயர்நிலை 5 வழக்கம் ஏட்டுக்கல்வி, உயர்நிலை 3 உயர்தமிழ் ஆகிய நிலைகளில் பயிலும் மாணவர்கள் பங்கெடுப்பர். இவ்வாண்டு, கூடுதலாக உயர்நிலை 4 உயர்தமிழ் பயிலும் மாணவர்களும் கலந்து கொள்ளும் வகையில் கற்றல் முகாம் விரிவுபடுத்தப்பட்டது. இரு நாள்கள் (மார்ச் 23 மற்றும் ஏப்ரல் 6) நடைபெற்ற இக்கற்றல் முகாமில், 12 தமிழ்மொழி நிலையங்களைச் சார்ந்த சுமார் 190 மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர். மேலும் மாணவர்களுக்குத் தன்முனைப்பை ஊட்டும் வகையில் தன்முனைப்புப் பேச்சாளர் அங்கமும் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

# “Sigaram Thodu” Motivational cum Study Camp









The Umar Pulavar Tamil Language Centre, as a National Resource Centre, organizes the “Sigaram Thodu” Motivational and Study Camp annually. This initiative is specially designed for Tamil students from 12 Tamil Language Centres who are preparing for their national examinations. The camp provides targeted support to Secondary 4 Express, Secondary 5 Normal (Academic), and Secondary 3 Higher Tamil students, equipping them with essential skills such as effective time management, sustaining interest in learning, and adopting proven study strategies. A key objective is to strengthen students’ self-confidence in managing their Tamil Language examinations successfully. This year, the programme was further extended to include Secondary 4 Higher Tamil students. The camp was conducted across two sessions, held on March 23rd and April 6th, with about 190 students in attendance. Participants benefited greatly from the sessions, which combined academic guidance with motivational talks. The inclusion of motivational speakers was a highlight, inspiring self-motivation and resilience among the students.



# நற்றமிழ் உரைக்களம்

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் தேசிய தமிழ்மொழி வளமையகமாகச் செயற்படுவதன் அடிப்படையில் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் ஆழ்ந்து சிந்தித்துப் பயன்முனைப்புமிக்கவாறு உரை நிகழ்த்தும் திறனை மேம்படுத்தும்பொருட்டு நற்றமிழ் உரைக்களம் என்ற போட்டியை நடத்தியது. இதில் தமிழ்மொழி நிலையங்கள் மற்றும் பள்ளிகளைச் சேர்ந்த உயர்நிலை 3 இல் பயிலும் மாணவர்கள் பங்கெடுத்தனர். மாணவர்கள் உரைக்களத்தில் உரை நிகழ்த்துதல் தொடர்பான தகவல்களைப் பெறவும் அடிப்படைத் திறன்களில் கூடுதல் பயிற்சி பெறவும் பயிலரங்கு ஒன்றிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தலைப்பை அணுகுதல், தகவல் சேகரித்தல் பகுத்தாய்தல், சான்றுகளை இணைத்தல், சிக்கலுக்கான தீர்வுகளை அடையாளங்காணுதல், உறுதிப்படுத்துதல், படைத்தலுக்காகத் தயார்செய்தல், படைத்தலின்போது கவனத்திற்கொள்ளவேண்டிய வழிமுறைகள்பற்றி வழிகாட்டப்பட்டது.

இறுதிச்சுற்றில் 4 பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர். அவர்கள் தமிழ்த்துறை சார்ந்த வல்லுனர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் முன்பு உரைப் படைப்பை நிகழ்த்தினர். தலைப்பிற்குப் பொருத்தமான கருத்துகளுக்கு வலுசேர்க்கும் தகவல்களை மாணவர்கள் படவில்லைகளாக உருவாக்கி உரையோடு இணைத்துப் படைத்தனர்.

ஒவ்வொரு குழுவுக்கும் 7 நிமிடங்கள் கொடுக்கப்பட்டன. அனைத்துக் குழுக்களும் படைத்தபின்பு வினா-விடை அங்கம் தொடங்கியது. குழுக்கள் பார்வையாளர்கள் எழுப்பும் வினாக்களுக்குப் பொருத்தமான தகவல்களை வழங்கித் தங்கள் கருத்தை நிலைநாட்டினர்.

இறுதியாக, வல்லுனர்கள் இருவர் எழுப்பும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தகுந்த ஆதாரங்களுடன் விளக்கினர். இறுதிச் சுற்றில் ஒரு குழு மட்டுமே வெற்றிக் குழுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. மற்ற குழுக்களுக்கு வெள்ளிக் கோப்பையும் சான்றிதழும் வழங்கப்பட்டன. வெற்றி பெற்ற குழுவினர்க்குச் சான்றிதழும் தங்கக் கோப்பையும் பள்ளிக்கு ஒட்டுமொத்த வெற்றியாளர் கோப்பையும் வழங்கப்பட்டது. தமிழ் மாணவர்கள் கொண்டிருக்கும் விசால அறிவைப் பறைசாற்றும் வகையில் அமைந்த இந்நிகழ்வு உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் நிகழ்ச்சிகளில் ஒரு வரலாற்று அத்தியாயம் தொடங்கிவைக்கப்பட்டது என்றே கூறலாம்.















# Students' Forum

As a National Tamil Language Resource Centre, UPTLC organised "Natramil Uraikkalam" a public speaking competition to enhance the public speaking skills of secondary school students, encouraging them to speak thoughtfully and purposefully. Upper secondary students from Tamil Language Centres and other schools participated in this competition.

Prior to the workshop was arranged to provide the students with information on speech delivery and offer additional training in basic skills. The students were guided on how to approach the topic, gather information, analyse it, integrate evidence, identify solutions to problems, validate their findings and prepare their speech. They were also instructed on the guidelines to follow while delivering their speech.

After gruelling qualifying round four schools qualified for the final round. The participants came fully prepared with visual aids to present their well-prepared presentations. They presented their speeches in front of experts from the Tamil field, parents, teachers and fellow students.

The presentation segment was followed by question-and-answer round where the teams responded to questions raised by audience and the experts defending their arguments with suitable evidence. The wines were then selected based on their performance. The winning teams were awarded with trophies and certificates to recognise their efforts.

This event, which showcased the vast knowledge of Tamil students, can be considered a historic chapter in the events organized by the Umar pulavar Tamil Language Centre.











# தொடக்கநிலை 5 மாணவர்களுக்கான தமிழ்மொழி கற்றல் விழா

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யும் தொடக்கநிலை 5 மாணவர்களுக்குரிய தமிழ்மொழி கற்றல் விழா, இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் தேதி, சனிக்கிழமை, காலை 8.30மணிமுதல் மதியம் 1.30 மணிவரை நேரடி நிகழ்வாகக் கோலாகலமாக நடைபெற்றது.

'படத்தைப் பார், பதிலைச் சொல்' (Connexions Game) என்னும் தலைப்பிலான நடவடிக்கையில் கலந்துகொண்டனர். இந்நடவடிக்கையில் இவ்விளையாட்டை விளையாடிப் பார்த்தனர். அதன் பிறகு, இவ்விளையாட்டுக்கான புதிர்களை உருவாக்கும் திறன்களைக் கற்றுக்கொண்டனர். மாணவர்கள் இத்திறன்களைக் கொண்டு புதிய கோணங்களில் சிந்தித்துப் படப்புதிர்களை உருவாக்கும் செயலில் ஈடுபட்டனர். அதன் பின்னர், தாங்கள் உருவாக்கிய புதிர்களை வைத்துத் தங்கள் நண்பர்களுடன் சுயமாக விளையாட்டை நடத்திப் பார்த்தனர். மேலும், இணையத்திலிருந்து படங்களைப் பயன்படுத்தும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய பதிப்புரிமை (copyright) சார்ந்த சட்டதிட்டங்களைப் பற்றியும் அறிந்து கொண்டனர்.

















# Tamil Language Learning Festival - Primary 5

UPTLC organised the Tamil Language Learning Festival TLLF (P5) on 19 April 2024 from 8.30am till 1.30pm. A total of 258 students participated in this joyful event. Connexion Game, Digital Puppetry & making of Village Handicrafts were the 3 captivating activities specially catered for the P5 cohort of students. The aim of the TLLF was to provide our students the opportunity to use Tamil Language in an authentic setting, allowing students to think out of the box and explore their creativity.

1. The Connexion Game encouraged students to think out of the box and play the Connexions game in Tamil, to connect pictures that form a word. They then learnt to use apps such as Canva to create their own puzzle and host a game with their friends. They also learnt about copyright and image sourcing from online.

2. Digital Puppetry was another activity where students learnt about traditional Bommalattam, see Shadow puppets from DakshinaChitra museum, and do storyboarding to plan their dialogues as well as movement of characters. All the groups then were invited up to present their storyboard, moving the characters themselves and speaking the dialogues to put up a Live Digital Puppetry show.

3. Village Handicraft is always a favourite finisher among participants as they show enthusiasm in bringing home their finished products. Students were given the opportunity to explore and learn about Tamil culture through creation of Tamil Village Handicrafts. During this activity students learnt to use clay to create Traditional Dolls and coconut leaves to weave baskets.



# உயர்நிலை ஒன்று உயர்தமிழ் முகாம்

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் ஆண்டுதோறும் உயர்நிலை ஒன்று உயர்தமிழ் மாணவர்களுக்குரிய தமிழ்மொழி பண்பாட்டு முகாம், இவ்வாண்டு மே மாதம் 18ஆம் தேதி, சனிக்கிழமை, காலை 8மணிமுதல் மதியம் 1.00 மணிவரை நேரிடை நிகழ்ச்சியாக நடந்தேறியது. தீவு முழுவதும் உள்ள பன்னிரெண்டு உயர்நிலைப்பள்ளிகளிலிருந்து 190 மாணவர்களும் ஆசிரியர்களும் பங்கெடுத்த இம்முகாமில் தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நடவடிக்கைகள் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டு நடத்தப்பட்டன. ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு பங்கேற்றனர். இவர்களுக்கு உயர்நிலை 3ல் பயிலும் உமறுப்புலவர் நிலைய மாணவர்கள் குழுத்தலைவர்களாக இருந்து வழிக்காட்டினர்.

இந்தத் தமிழ்மொழி பண்பாட்டு முகாம் 2024-ன் நோக்கம் தாய்மொழி சார்ந்த புலமையையும், அறிவையும் வளர்த்து மரபு மற்றும் பண்பாடு சார்ந்த கற்றல் விளைவுகளையும் அறிந்து அனுபவித்து பிற இன மாணவர்களிடம் எடுத்துச்சென்று நம் கலாசாரத்தின் பெருமைகளைப் பறைசாற்ற வேண்டும் என்பதே ஆகும்.

வில்லுப்பாட்டு, செயற்கை நுண்ணறிவு, கபடி, சிலம்பம், உறியடித்தல் எனப் பலதரப்பட்ட நடவடிக்கைகள் மாணவர்களுக்கெனத் தயாரிக்கப்பட்டிருந்தன. வில்லுப்பாட்டின்மூலம் நமது சிங்கப்பூரின் வரலாற்றைப் பாடலைப் பாடும் முறையை அறிந்துகொண்டனர். இசையும் பாடலும் ஒருசேர உயிர்த்தெழுந்த நாடக வடிவம் மாணவர்களிடையே மொழிப் புழக்கத்தை அதிகரித்ததோடு, மாணவர்களின் சிந்தனைத் திறனையும் படைப்பாற்றலையும் புத்தாக்கத்திறனையும் வெளிக்கொணர நல்ல தளமாக அமைந்தது.

தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள் எவ்வாறு விளையாடப்பட்டன என்பதை மாணவர்கள் அறிந்துகொண்டதோடு அவற்றை நேரடியாக விளையாடிப் பார்க்கும் வாய்ப்பினையும் பெற்றனர். இந்த நடவடிக்கைகளில் மாணவர்கள் கபடி, சிலம்பம், உறியடித்தல் ஆகியவற்றை ஆடுவது எப்படி என்று கற்றுக்கொண்டனர். இந்த அனுபவம் மாணவர்களுக்கு உற்சாகத்தையும் ஆர்வத்தையும் ஊட்டியதோடு தமிழ் கலாசாரத்தைப் பற்றி மேலும் ஆழமாகப் புரிந்துகொள்ளவும் வழிவகுத்தது. இந்தத் தமிழ்மொழி பண்பாட்டு முகாம் பல்வேறு நிலைகளில் மாணவர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக அமைந்தது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.







# Secondary One Higher Tamil Camp



The Higher Tamil Language and Cultural Camp for One students was held at Umar Pulavar Tamil Language Centre. This year's event took place on May 18th, Saturday, from 8:00 AM to 1:00 PM as a live event. A total of 190 students and teachers from twelve secondary schools across the island participated in this camp, which featured well-structured activities centered around Tamil language, Tamil culture, and information technology. The students participated with great enthusiasm in each activity. Students from Umar Pulavar Tamil Language Centre, studying in Level 3, served as group leaders and guided the participants.

The goal of the Tamil Language and Cultural Camp 2024 was to develop expertise and knowledge related to the mother tongue, understand and experience the educational outcomes related to traditions and culture, and spread the glory of our cultural heritage to students of other ethnicities. Various activities such as Villupattu (traditional Tamil music), Artificial Intelligence, Kabaddi, Silambam (Tamil martial arts), and Uridithal (a traditional game) were prepared for the students. Through Villupattu, they learned how to sing songs that narrate the history of Singapore. The combination of music and singing in a dramatic form increased the language interaction among students and served as a good platform to enhance their thinking skills, creativity, and innovative potential.

The students also learned how to play Tamil traditional games and had the opportunity to experience them firsthand. In these activities, students learned how to play Kabaddi, Silambam, and Uridithal. This experience not only energized and motivated the students but also helped them gain a deeper understanding of Tamil culture.

There is no doubt that the Tamil Language and Cultural Camp was incredibly beneficial for the students in various aspects.















# இலக்கிய அறிமுக நிகழ்வு

2024 ஜூலை 13ஆம் நாள், நமது உயர்நிலை இரண்டு உயர்தமிழ் (HTL) மாணவ-மாணவியரும் அவர்களின் பெற்றோரும் இலக்கிய அறிமுக நிகழ்வில் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். இலக்கியத்தின் தனித்துவமான பயன்களையும் அது வழங்கும் பரந்த வாய்ப்புகளையும் முன்னிறுத்தி, மாணவர்களைத் தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் கொள்ளச் செய்வதே இந்த நிகழ்ச்சியின் நோக்கமாக இருந்தது.

படைப்பாற்றலை வளர்க்கவும், விமர்சன சிந்தனையை மேம்படுத்தவும், கலாசாரப் பண்பாட்டறிவை ஆழப்படுத்தவும் இலக்கியம் எவ்வாறு உதவுகிறது என்பதைக் கண்டறியும் சுவாரஸ்யமான தருணங்களால் நிறைந்திருந்தது இந்நிகழ்வு. தகவலளிக்கும் விளக்கக் கூட்டத்தையும், உற்சாகமூட்டும் கலந்துரையாடலையும் தொடர்ந்து, மாணவர்கள் மற்றும் பெற்றோர் தங்கள் கேள்விகளை முன்வைத்து, தங்கள் பார்வைகளைப் பகிர்ந்து, இலக்கியப் பயணம் வழங்கும் பல்வேறு பாதைகளை ஆராய்ந்தனர்.

அறையில் நிலவிய கலந்துரையாடலில் இருந்து, நிகழ்ச்சி முடிவில் பலரும் இலக்கியத்தை ஒரு பாடமாக மட்டுமல்லாது, வாழ்நாள் முழுவதும் தொடரும் ஒரு ஆர்வமாகவும் ஏற்கும் புதிய உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் சென்றனர்.







# Literature Outreach Programme

On 13 July 2024, our Secondary 2 Higher Tamil Language (HTL) students and their parents took part in an inspiring **Literature Outreach Programme.** The initiative aimed to spark interest in Literature by highlighting its unique benefits and the wide range of opportunities it offers. The afternoon was filled with engaging moments as participants discovered how Literature opens doors to creativity, critical thinking, and a deeper appreciation of culture.

Through an informative presentation and a lively dialogue session, both students and parents had the chance to voice their questions, share their perspectives, and explore the many pathways that studying Literature can offer. The energy in the room was infectious, and by the end of the programme, many left with renewed excitement and confidence to embrace Literature as a subject – and as a lifelong passion.







# 47th ஆம் ஆண்டின் பரிசளிப்பு விழா

















47ஆம் ஆண்டின் பரிசளிப்பு விழா நமது நிலையத்தில் ஆகஸ்ட் 3-ஆம் தேதியன்று சிறப்பாக நடந்தேறியது. இவ்விழாவில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் இணைக்கப்பட்டிருந்தது விழாவிற்குச் சிறப்பு சேர்த்தது. உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய முன்னாள் மாணவரும் உதவிக் கண்காணிப்பாளர், இணையப் பாதுகாப்பு நிபுணர், சிங்கப்பூர்க் காவல் துறை அதிகாரியான திரு க அரவிந்த் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்ச்சியில் தலைமையுரை ஆற்றினார்.

2024ஆம் ஆண்டிற்குரிய செயல்வழி விழுமிய விருது செல்வி முருகன் ரூபிகாவிற்கும் செல்வி ராதாகிருஷ்ணன் ஷாரனிக்கும் வழங்கப்பட்டது. இந்திய நிகழ்த்துகலை நடவடிக்கைகான விருது செல்வி தேஜல் சசிக்குமார் அவர்களுக்கு வழங்கப்பட்டது. நம் நிலையத்தின் 2024ஆம் ஆண்டுக்கான உன்னத விருது மாணவி திருமலைச்சாமி லிவிஸ்ரி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

நிலைய நிகழ்ச்சிகளுக்கு ஆதரவு வழங்கிய முன்னாள் மாணவர் சங்க உறுப்பினர்களுக்கும் பெற்றோர் ஆதரவு குழுவின் செயற்குழு உறுப்பினர்களுக்கும் முக்கிய பங்காளிகளுக்கும் சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன.





# 47th Annual Speech & Prize Presentation Ceremony



The 47th Annual Prize-Giving Ceremony of our Centre was successfully conducted in August. The event was further distinguished by the integration of Artificial Intelligence technology, which added significance and innovation to the occasion.



Mr. K. Aravind, alumnus of Umar Pulavar Tamil Language Centre, Assistant Superintendent of Police, and Cybersecurity Specialist at the Singapore Police Force, attended as the Guest of Honour and delivered the keynote address.



The Exemplary Conduct Award 2024 was conferred on Ms. Murugan Rubika and Ms. Radhakrishnan Sharani. The Indian Performing Arts Award was presented to Ms. Tejal Sasikumar. The institute's Distinguished Student Award 2024 was awarded to Ms. Thirumalaichamy Livitsri.

In addition, special awards were presented to members of the Alumni Association, the Parent Support Group Executive Committee, and key partners in recognition of their support for the institute's programmes.













# தமிழ்த் திருவிழா

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் ஆண்டுதோறும் சிறப்பாக நடத்திவரும் பரிசளிப்பு விழாவும் தமிழ்த் திருவிழாவும், இவ்வாண்டு ஆகஸ்ட் 3-ஆம் தேதி, சனிக்கிழமை, காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை நடைபெற்றது. தமிழரின் பாரம்பரியக் கலைகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதோடு, மாணவர்களின் தமிழ்மொழி கற்றல் மற்றும் கற்பித்தல் அனுபவங்கள் வகுப்பறைக்குப் புறம்பாகவும் சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்விழா நடத்தப்பட்டது. இவ்விழாவில் தொடக்கப்பள்ளியிலிருந்து 350 மாணவர்களும், உயர்நிலைப்பள்ளி மற்றும் தொடக்கக்கல்லூரியிலிருந்து 250 மாணவர்களும், மொத்தம் 600 மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். பறையாட்டம், சிலம்பாட்டம், கபடி, உறியடி, நாட்டுப்புற நாடகம், ஒயிலாட்டம், கிட்டி அடியல், மான்கொம்பு, கரகாட்டம் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் அவர்கள் பங்கேற்றனர்.

தமிழகத்திலிருந்து திரைப்பட இயக்குநரும் நாட்டுப்புற நாடக நடிகருமான திரு. அனீஸ் அவர்கள் மற்றும் நாட்டுப்புற ஆய்வாளரும் நாடக இயக்குநருமான முனைவர் செந்திலிங்கம் அவர்களும் “வாழ்க்கைக்கான சாத்தியக்கூறுகள்” என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்ட வீதிநாடகத்தின் மூலம் கலைகளை நிகழ்த்தினர். அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகள், நவீன உலகில் மரபையும் பண்பாட்டுக் கலைகளையும் ரசிப்பதோடு, அவற்றைப் பாதுகாப்பதும் தம் கடமை என்பதை ஒவ்வொரு மாணவரின் உள்ளத்திலும் உணர்த்தியது எனலாம்.





















# Tamil Fest

The Umar Pulavar Tamil Language Centre successfully conducted its annual Prize-Giving Ceremony and Tamil Fest 2024 on Saturday, 3rd August, from 8:00 a.m. to 2:00 p.m. The event aimed not only to introduce students to traditional Tamil arts but also to create meaningful and enjoyable opportunities for students to enhance their Tamil learning and teaching experiences beyond the classroom.

A total of 600 students participated in the celebration – 350 from primary schools and 250 from secondary schools and junior colleges – and benefitted from the various activities. Students took part in traditional performances and games such as parai attam (drum dance), silambam (stick martial art), kabaddi, uriyadi (pot-breaking), folk dramas, oyilattam (folk dance), kitti adiyal, man kombu, and karagattam (pot dance).

Renowned film director and folk theatre artist Mr. Anis from Tamil Nadu, along with folk researcher and theatre director Dr. Senthil Lingam, performed a street play based on the theme “Possibilities in Life.” The performances inspired every student to appreciate and preserve Tamil traditions and cultural arts in today’s modern world – a valuable reminder of their shared heritage and responsibility

















# தாய்மொழிகளுக்கான கருத்தரங்கு

சிங்கப்பூரின் தேசிய தமிழ்மொழி வளமையகமான உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம், தாய்மொழிகளுக்கான கருத்தரங்கு 2024-இல் பங்கேற்று, தமிழ்மொழிக் கல்வியில் மேற்கொண்டு வரும் புதுமையான முயற்சிகளைக் காட்சிப்படுத்தியது.

அந்தக் கருத்தரங்கில், நிலையம் செயற்கை நுண்ணறிவு தொடர்பாக மேற்கொண்டிருக்கும் ஆராய்ச்சி, மெய்நிகர் வளங்கள் (VR), 360° கற்றல் வளங்கள் குறித்த பல தகவல்களைப் பகிர்ந்து கொண்டது. இவ்வளங்கள் மாணவர்களுக்கு உண்மைத்தன்மை வாய்ந்த பண்பாட்டு அனுபவங்களை வழங்கி, ஈடுபாடும் மகிழ்ச்சியும் நிறைந்த கற்றலுக்குத் துணைபுரியும் விதத்தையும் அது காட்சிப்படுத்தியிருந்தது.

மேலும், “தொல்தமிழரின் மரபிசையும் நவீன முழக்கமும்” என்ற தலைப்பில், இந்திய நிகழ்த்துகலை மாணவர்கள் பறையிசை மற்றும் முழக்கங்களை இணைத்து நிகழ்த்திய கலைவிழா, தமிழ்மொழி மரபையும் அதன் நவீனத்தன்மையையும் சிறப்பாக வெளிப்படுத்தியது. இந்திய நிகழ்த்துகலை வகுப்பு பறையிசை மாணவர்களின் இந்தக் கலைபடைப்பு, சிறப்பு விருந்தினரான கல்வி அமைச்சர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் பாராட்டைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும், நிலையத்தின் துறைத்தலைவர் பெற்றோருக்கான பகிர்வு அமர்வில் பங்கேற்று, வீட்டில் குழந்தைகள் தமிழைப் பயன்படுத்த ஊக்குவிக்கும் வழிமுறைகள் குறித்த நடைமுறைச் சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்டார். அன்றாட உரையாடல், வாசிப்பு, கலாசார நிகழ்வுகளில் பங்கேற்பது போன்ற வழிகளில் குழந்தைகளின் மொழிச் சூழலை வளப்படுத்தும் வழிகள் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டன. இந்தப் பகிர்வு கலந்துகொண்ட அனைவருக்கும் பயன்மிக்கதாக அமைந்திருந்தது.

# Mother Tongue Languages Symposium









As Singapore’s National Tamil Language Resource Centre, Umar Pulavar Tamil Language Centre (UPTLC) participated in the Mother Tongues Symposium 2024 to showcase its innovative efforts in Tamil language education.

At the symposium, UPTLC shared insights from its ongoing research in artificial intelligence, as well as the development of Virtual Reality (VR) and 360° learning resources. These resources were presented as tools that provide students with authentic cultural experiences while enabling joyful and engaging learning.

In addition, students from the Indian Performing Arts programme staged a performance titled “Echoes of Tamil Tradition and Contemporary Voices”, which combined parai drumming with modern expressions of Tamil identity. This performance highlighted both heritage and modern relevance, and received strong commendation from various stakeholders, including the Minister for Education, who was the Guest-of-Honour at the event.

Furthermore, UPTLC’s Head of Department took part in a dedicated parent-sharing session, offering practical tips on encouraging children to use Tamil at home. Suggestions included fostering daily conversations in Tamil, engaging in shared reading, and participating in cultural activities to enrich the home language environment. This segment was especially well-received and found meaningful by the parents who attended.

Through these contributions, UPTLC reaffirmed its commitment to advancing Tamil language learning while engaging students, parents, and the wider community in sustaining mother tongues within Singapore’s multilingual landscape.

# வளமூட்டும் நடவடிக்கைகள் & தேர்விற்குப் பிந்தைய நடவடிக்கைகள்



உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் தேர்வுகளுக்குப் பிந்தைய நடவடிக்கைகள் என்னும் திட்டத்தின்கீழ் மாணவர்கள் பயன்பெறும்வகையில் பல்வேறு வளமூட்டும் நடவடிக்கைளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. உயர்தமிழ் பயிலும் மாணவர்களுக்காக ‘கற்றலில் நாடகத்தின் பங்கு’ என்னும் கருப்பொருளைக்கொண்டு நாடகப்பட்டறை தேசிய நூலக வாரியத்தின் ஆதரவோடு நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக அகம் நாடகக்குழுவினர் படைத்த ‘பனிக்கண்’ என்னும் நாடகத்தை நேரடியாகச் சென்றும் கண்டு களித்தனர். இவற்றில் நிறைநிலை மாணவர்களைத் தவிர உயர்நிலை ஒன்று முதல் மூன்று வரையிலான மாணவர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.

தீபாவளி விழாவின்போது சிராங்கூனில் உள்ள மரபுடைமை நிலையத்திற்கும் கேம்பர் லேனில் அமைந்திருக்கும் தீபாவளிச் சந்தைக்கும் சென்று சமூகப் பண்பாட்டு வரலாற்றையும் நடைமுறையையும் புரிந்துகொண்டர். அத்துடன் வரலாற்றுச் சிறப்புமிக்க அங்குலியா பள்ளிவாசலுக்கும் சென்று அதன் வரலாற்றுப் பின்னணியையும் அறிந்துகொண்டனர். அதோடு ‘இலக்கியத்தில் இனிமை’ என்னும் தலைப்பில் தமிழ் இலக்கியங்களைப் பற்றிய அருமையான தகவல்களை உயர்தமிழ் பயிலும் மாணவர்களுக்கு திரு ஜெயராஜ்தாஸ் பாண்டியன் அவர்கள் சுவைப்பட எடுத்துரைத்தார். அனைத்து மாணவர்களும் பாரம்பரிய விளையாட்டுக்களை விளையாடி, நேரடி அனுபவ அறிவைப் பெற்றனர்.







# Enrichment Activities & Post Exam Activities







The students of Umar Pulavar Tamil Language Centre enjoyed many exciting programme as part of the centre's Post Exam and Enrichment Activities for 2024. The activities included a workshop entitled "The Role of Drama in Learning" organized for Higher Tamil Students, with the support of the National Library Board's Drama Section. Following this, students had the opportunity to directly witness the play "Panikkann" performed by the Agam Drama Group.

During the Deepavali festival, students visited Indian Heritage Centre in Little India explored the Deepavali markets at Cambell Lane and learned about the historical significance of the Anguliya Masque. In addition, under the theme "The Beauty in Literature," Mr. Jeyarajdas Pandian delivered an engaging and insightful presentation on Tamil literary works to the Higher Tamil students. All the students also played traditional games which connected them to their heritage and roots.






# நிறைநிலை மாணவர்களுக்கான விடைகொடு விழா

# Graduation Day





உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் கடந்த 4 முதல் 5 ஆண்டுகள் பயின்ற மாணவர்களுக்கு ஒரு பொருத்தமான மற்றும் மறக்க முடியாத பிரிவை வழங்க, 2024-ல் நவம்பர் 13-ஆம் தேதி விடைகொடு விழா நடத்தப்பட்டது. இந்த நிகழ்வின் வழிநடத்துநர்களாக முன்னாள் மாணவர்கள் செயல்பட்டது, அவர்களின் உறவு நமது நிலையத்தில் தொடர்ச்சி இருக்கும் வகையில் இருந்தது சிறப்பானதாக அமைந்தது. கொண்டாட்டத்தில் பரிசுகளுடன் கூடிய விளையாட்டுகள், ஆடை அலங்கார பேரணி மற்றும் சுவையான சைவ மற்றும் அசைவ உணவு வகைகள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் இடம்பெற்றன. இந்திய நிகழ்த்துக்கலை மாணவர்களின் உயிர்ப்பான ஆடலும் பாடலும் பறை இசை நிகழ்வும் விழாவின் மகிழ்ச்சியை அதிகரித்தன.

உமறுப்புலவர் தமிழ்மொழி மாணவர்களின் கடந்த காலத்தைப் பதிவு செய்யும் வகையில் ஒரு ஒளிக்காட்சி ஒளிபரப்பப்பட்டது. நிறைநிலை மாணவர்களும் முன்னாள் மாணவர்களும் மட்டுமன்றி ஆசிரியர் பெருமக்கள் அனைவரும் 80களில் வெளிவந்த திரைப்பட நாயகன் மற்றும் நாயகியர் போல உடையணிந்து வந்திருந்தது கண்ணைக் கொள்ளை கொள்ளும் வகையில் அமைந்திருந்தது. அவர்களை நிலைய இயக்குனரை அன்பாக வரவேற்றனர், அவரது ஊக்கம் தரும் உரை மாணவர்களின் உள்ளங்களில் ஆழமாக ஒலித்தது.

நிகழ்ச்சி 360-டிகிரி ஒளிக்காட்சிப் படப்பிடிப்புடன் நிகழ்ச்சி ஒரு நிறைவை எட்டியது, மாணவர்களின் நினைவுகளில் மகிழ்ச்சியான தருணங்களை உருவாக்கியது. இந்த நாள் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் அவர்களின் காலத்தை நினைவில் வைத்துப் போகும் இனிமையான நினைவுகளை மாணவர்களுக்கு வழங்கியது. இது ஒரு அத்தியாயத்தின் முடிவையும், இன்னொரு அத்தியாயத்தின் தொடக்கத்தையும் குறிக்கிறது. இம்மாணவர்கள் முன்னாள் மாணவர்கள் குழுவில் இணையவும் எதிர்காலத்தில் நம் நிலையத்திற்குப் பங்களிக்கவும் அவர்களை ஊக்குவித்தது.

















To provide a meaningful and memorable farewell to the graduating students who had journeyed with UPTLC over the past 4 to 5 years, Graduation Day was organized on November 13, 2024. The event was made special with alumni serving as emcees, adding a touch of continuity and connection. The celebration featured a vibrant lineup of activities, including games with prizes, a Fashion Parade, and a lavish buffet with delicious vegetarian and non-vegetarian food. Lively song and dance performances by IPAP students added to the festive atmosphere.

A heartfelt video montage captured the students' journey at UPTLC over the years, evoking nostalgia and pride. The event commenced on a high note, with alumni emcees dressed in retro attire setting the tone for the day. They warmly welcomed the Centre Director, whose inspiring speech resonated deeply with the graduates.



Teachers also embraced the retro theme, sharing their memories through a specially created video. The ceremony concluded with a fun-filled 360-degree video shoot, creating enjoyable moments that the graduates will cherish for years to come.

The day left the students with fond memories of their time at UPTLC, marking the end of one chapter and the beginning of another. While the graduation ceremony bid farewell to the students, it also sought to strengthen their connection with the Centre, encouraging them to join the alumni community and return to contribute to UPTLC in the future.









# மாணவர் திறன் மேம்பாடு – போட்டிகள்

2024ஆம் ஆண்டில் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய மாணவர்கள் மொத்தம் 13 போட்டிகளில் பங்கேற்றனர். சுமார் 130 மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். பெரும்பாலான போட்டிகள் சிங்கப்பூரிலுள்ள பல்வேறு தமிழ்ச்சமூக அமைப்புகளால் தேசிய அளவில் நடத்தப்பட்டன.

நாடகம் மற்றும் சிறுகதை எழுதுவதற்கு நானும் ஒரு படைப்பாளி (NOP), கவிதை, மொழிபெயர்ப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு -கவிதைக்களுக்காகக் கவிமாலை, கதை எழுதும் பயிலரங்குக்காகக் கதைக்களம் போன்ற ஆக்கப்பூர்வ எழுத்துப் போட்டிகள், மாணவர்களின் இலக்கியத் திறனை வளர்த்துக்கொள்ளவும், படைப்பாற்றல் மற்றும் சுய வெளிப்பாடுகளை வளர்க்கவும் வாய்ப்புகளை அளித்தன.

பேச்சு, ஆராய்ச்சி மற்றும் படைத்தல் திறன்களை வலுப்படுத்த, நாற்றமிழ் உரைக்களமும் ஆய்வுக் கட்டுரை விளக்கக்காட்சி போன்ற படைத்தலுக்குத் தமிழ் மொழியின் சொல்லாட்சி போட்டியிலும் மாணவர்கள் ஈடுபட்டனர். கூடுதலாக, யுத்தம் 2024 தமிழ் மொழி விளையாட்டு நிகழ்ச்சியில், மாணவர்களின் தமிழ் பேசுதல் திறனையும் தொடர்பாடல் திறன்களையும் மேம்படுத்தி, அவர்களின் மொழிப்புலமை மற்றும் நம்பிக்கையை மேம்படுத்த உதவியது.

தமிழில் யோசி தமிழில் வாசி, மீடியாகார்ப் நிறுவனத்தின் ஒரு நிருபராக எனது பயணம், மற்றும் இன்ஃபோனிடிக்ஸ் போன்ற பயிலரங்குகள், அச்சு மற்றும் மெய்நிகர் தளங்களில், ஊடகத் துறைகளில் தமிழின் பயன்பாட்டை மாணவர்கள் அறிந்துகொள்ள அனுமதித்தன. ஊடக வல்லுனர்களின் வழிகாட்டுதலின் பேரில், மாணவர்கள் பயிற்சி பெற்றனர். மேலும், தங்கள் சொந்த செய்தித் தயாரிப்புகளை உருவாக்கும் அனுபவத்தைப் பெற்றனர். இந்த வாய்ப்பானது ஊடகத் துறைகளில் தமிழ்மொழியின் தொழில்ரீதியான பல்வேறு பயன்பாட்டு நடைமுறை திறன்களையும் சிந்தனைகளையும் அவர்களுக்கு வழங்கியது. மேலும் மொழியின் எதிர்காலப் பயன்பாடுகளுக்கான தேவைகளை அறிந்துகொள்ள உதவியது.

தமிழில் செயற்கை நுண்ணறிவு போட்டிகளான, செந்தமிழ் உலகில் செயற்கை நுண்ணறிவு-1, செந்தமிழ் உலகில் செயற்கை நுண்ணறிவு -2 மற்றும் செந்தமிழில் செயற்கை நுண்ணறிவு நிரல் எழுதுதல் — மாணவர்களுக்கு நுண்ணறிவுவில் நிரல் எழுதல் மற்றும் மெய்நிகர் உலகின் மாதிரி உருவாக்கம் ஆகியவற்றில் செயற்கை நுண்ணறிவு இணைய தளங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கும் அனுபவத்தை வழங்கியது. பாரம்பரிய கல்விக்கு அப்பால், இந்த நிகழ்வுகள் 21-ஆம் நூற்றாண்டிற்குத் தேவையான திறன்களை வளர்த்தன. மின்தொழிற்நுட்பக் கல்வியறிவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம், இன்றைய உலகத்தை வழிநடத்துவதற்குத் தேவையான மின்தொழிற்நுட்பக் கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களுடன் மாணவர்கள் நடைமுறை அனுபவத்தைப் பெற்றனர். செயற்கை நுண்ணறிவுவை மையப்படுத்தப்பட்ட போட்டிகள் செயற்கை நுண்ணறிவின் திறனைப் பற்றிய அவர்களின் புரிதலை ஆழமாக்கியது.

கவிமாலை, செந்தமிழ் உலகில் செயற்கை நுண்ணறிவு -1, ஆராய்ச்சி கட்டுரை படைத்தல் போட்டியான தமிழ் மொழியின் சொல்லாட்சி மற்றும் செந்தமிழ் உலகில் செயற்கை நுண்ணறிவு -2 - உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் மாணவர்கள் பரிசுகளை வென்றனர். செந்தமிழ் உலகில் செயற்கை நுண்ணறிவு -2-ல் தேசிய அளவில் முதல் மற்றும் இரண்டாம் இடத்தை வென்று நிலைய மாணவர்கள் சாதனை புரிந்தனர். இந்தக் குறிப்பிடத்தக்க சாதனையை நிகழ்த்திய மாணவர்களின் பேட்டியை தமிழ் முரசு ஊடகம் வெளியிட்டது.

இந்தப் பன்முகப் போட்டிகள் மாணவர்களுக்கு, வகுப்பறைக்கு அப்பால் திறன்களைக் கட்டியெழுப்ப ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்கியது. இதன்வழியாக, கல்வி மற்றும் தொழில் ரீதியாக சிறந்து விளங்க மாணவர்கள் தங்களைத் தயார்படுத்த உதவின. இந்த மாறுபட்ட வாய்ப்புகளின் மூலம், மாணவர்கள் அறிவார்ந்த வளர்ச்சியை மட்டுமல்ல, அவர்களின் வாழ்நாள் முழுவதும் பயன்படும் நடைமுறை திறன்களையும் பெற்றுக்கொண்டார்கள்.



# Talent Development Program – Competition

This year 2024, UPTLC students have actively participated in a total of 13 competitions, with around 130 students showcasing their skills and talents. The competitions were thoughtfully designed and organized in collaboration with external community partners who created a wide range of events tailored to develop essential skills.

Creative writing competitions, such as Naanum Oru Padaippaali (NOP) for drama script and short story writing, KAVIMALAI for poetry, translation, and AI-poetry, KATHIKALAM for story writing workshops, Poem recital competition provided students with opportunities to hone their literary skills, fostering creativity and self-expression.

To strengthen speaking, research, and presentation skills, students engaged in events like NATRAMIL URAIKALAM and Rhetoric of Tamil Language - Research Paper Presentation, which encouraged them to conduct research, articulate their ideas confidently, and present them effectively, equipping them for real-world scenarios. Additionally, Yutham 2024, a Tamil language game show, enhanced students' speaking and communication skills in Tamil, further developing their language proficiency and confidence.

Workshops such as Tamilil Yosi Tamilil Vaasi, Mediacorp and My Journey as a Reporter, and INFONITICS allowed students to explore the use of Tamil in media fields, including print and online platforms. Guided by media experts, students received training and created their own news products, gaining hands-on experience. This exposure provided them with practical skills and ideas for using Tamil professionally across various media fields, giving them valuable insights for future applications of the language.

The workshops and competitions—TAMIL IN AI - AIAS, AI in SENTHAMIZ World - IIAC, and The Power of AI in SENTHAMIZ World - Tamil Youth Festival 2024—offered students hands-on experience in AI prompt writing and virtual reality model creation using specialized web platforms. Beyond traditional academics, these events promoted essential 21st-century skills. By engaging in digital literacy activities, students gained practical experience with digital tools and technologies that are crucial for navigating today's world. The AI-focused competitions deepened their understanding of artificial intelligence's potential, while activities in virtual environment development enhanced their abilities to create immersive digital spaces.

Our students have earned awards across various competitions, including KAVIMALAI for poem writing, AI in Senthamizh World - Tamil Language Fest for AI prompt development in virtual reality, Rhetoric of Tamil Language for research paper presentations, and AI in Senthamizh World - Youth Fest. A standout achievement was in The Power of AI in SENTHAMIZ World - Youth Fest 2024, part of the Tamil Youth Festival 2024 workshop and competition, where two of our secondary-level teams participated and secured both 1st and 2nd place. This remarkable accomplishment was also highlighted in the media by Tamil Murasu.

These multifaceted competitions provided students with a unique opportunity to build skills that reach beyond the classroom, preparing them to excel both academically and professionally. Through this diverse exposure, students are not only growing intellectually but also gaining practical skills that will serve them throughout their lives.











# செயல்வழி விழுமியங்கள் திட்டம்









செயல்வழி விழுமிய நடவடிக்கை என்பது உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் ஒரு முக்கிய நடவடிக்கையாக உள்ளது. அர்த்தமுள்ள சமூகப் பங்களிப்புகள் மூலம் மாணவர்கள் தங்கள் திறன்களையும் பண்புகளையும் வளர்த்துக்கொள்வதோடு அவற்றைப் பயன்படுத்திச் சமூகத்திற்குத் தங்களால் இயன்ற வகைகளில் பங்களிக்கும் சமூகப் பொறுப்புள்ள குடிமக்களாக மாணவர்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். 2024 ஆம் ஆண்டில், உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையத்தினரான நாங்கள் இத்திட்டம் தொடர்பான முயற்சிகளை விரிவுபடுத்தினோம். மாணவர்கள் எங்களது நிலைய நிகழ்ச்சிகளில் மட்டுமல்லாது சமூகத்துடன் ஈடுபடுவதற்கும் பல்வேறு வாய்ப்புகளை உருவாக்கித் தந்தோம்.

பொங்கல் விழா, தமிழ்மொழி கற்றல் விழா, கல்வி முகாம், பரிசளிப்பு விழா, தமிழ் விழா உள்ளிட்ட பல முக்கிய நிகழ்வுகளின் போது உபசரிப்பு அங்கங்களில் நமது மாணவர்கள் தலைமைத்துவப் பொறுப்புகளை ஏற்றனர். மாணவர்த் தலைவர்கள் என்ற முறையில், இந்நிகழ்வுகள் சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்வதில் அவர்கள் முக்கிய பங்கு வகித்தனர்.

நமது நிலையம் சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டு சங்கம், தேசிய நூலக வாரியம் மற்றும் இந்திய மரபுடைமை நிலையம் போன்ற மதிப்புமிக்க சமூக அமைப்புகளுடன் கைகோர்த்து, மாணவர்கள் நமது நிலைய வளாகத்திற்கு அப்பால் தங்கள் சேவையை நீட்டிக்க உதவியது. மாணவர்கள் இந்திய மரபுடைமை நிலையம் மற்றும் தேசிய நூலக வாரியத்துடன் இணைந்து செயல்பாட்டுக் கூடங்களை அமைத்து, பொதுமக்களை வரவேற்று உபசரித்தனர்.

இவ்வாண்டு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்திய அனுபவங்களில் ஒன்று, சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கத்தின் ப்ராஜெக்ட் கிவ் 2024. அங்கு நமது மாணவர்கள் குறைந்த வருமானம் கொண்ட இந்தியக் குடும்பங்களின் உறுப்பினர்களை மகிழ்விக்க தமிழ் பாரம்பரிய விளையாட்டுக் கூடங்களை அமைத்தனர். இந்தத் திட்டம் பிறர்மீதான பரிவையும் அக்கறையையும் வளர்த்தது. இத்திட்டம் சமூகத்தோடான உறவுகளை வலுப்படுத்தும் அதே வேளையில், மாணவர்கள் மற்றவர்கள் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது.

2024 ஆம் ஆண்டில், ஏற்பாடு செய்யப்பட்ட செயல்வழி விழுமிய நடவடிக்கைகள் மாணவர்களிடத்தில் சேவை மனப்பான்மை, தலைமைத்துவப் பண்பு போன்றவற்றை வளர்க்க பெரிதும் உதவின. இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள் என்பதற்கிணங்க நமது நிலைய மாணவர்கள் நாளைய சமூகத்தில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தும் அர்ப்பணிப்புள்ள, பரிவுமிக்க குடிமக்களாக உருவாகுவதற்கு நமது நிலையத்தின் செயல்வழி விழுமிய நடவடிக்கைகள் பெருந்துணை புரியும் என்று நம்புகிறோம்.



# Values in Action (VIA) Project : Students, Strengthening Community

Values in Action (VIA) is a cornerstone initiative at Umar Pulavar Tamil Language Centre (UPTLC), fostering socially responsible citizens by helping students learn, apply, and live by core values through meaningful community contributions. In 2024, we expanded our VIA efforts, creating diverse opportunities for students to support internal events and engage with the broader community.

Within UPTLC, our students took on leadership roles at several major events, including the Pongal Festival, Tamil Language Learning Festival, Study Camp, Speech Day, and Tamil Fest. As student leaders, they played a critical role in ensuring these events ran smoothly, showcasing their initiative and dedication.

Our centre also partnered with esteemed external organizations like SINDA, the National Library Board (NLB), and the Indian Heritage Centre (IHC), enabling students to extend their service beyond our campus. Students collaborated with IHC and NLB to staff and manage activity booths, helping to make cultural learning accessible and engaging for the public. Their role in these collaborations not only strengthened their organizational skills but also deepened their sense of cultural pride and community connection.

One of the most impactful experiences this year was Project Give 2024 with SINDA, where our students set up Tamil Traditional Game booths to entertain and connect with members of low-income Indian households. This project fostered a sense of empathy and solidarity, allowing students to bring joy to others while strengthening their own ties to the community
.

In 2024, UPTLC's VIA program gave students the platform to embody the values of service, leadership, and cultural pride. As they continue on this path, we are confident they will emerge as active, empathetic citizens dedicated to making a positive difference in society.











# உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையக் கற்றல் பயணம்



ஆண்டுதோறும் நம் நிலையத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளில் ஒன்று நிலைய கற்றல் பயணம். உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் தேசிய தமிழ்மொழி வளமை நிலையமாகவும் செயல்பட்டு வருகிறதால் சிங்கப்பூரில் உள்ள அனைத்துத் தமிழ் மாணவர்களும் பயன் அடையும் வகையில் தமிழ்மொழி, பண்பாடு, கலை தொடர்பான பல நடவடிக்கைகள் எங்கள் நிலைய கற்றல் பயணத்தில் வடிவமைக்கபட்டுள்ளன. கற்றல் பயணத்தின் நோக்கம் தமிழ்மொழி சார்ந்த புலமையையும், மரபு மற்றும் பண்பாடு சார்ந்த கற்றல் விளைவுகளை அறிந்து அனுபவித்து மாணவர்கள் பயன் அடைய வேண்டும் என்பதே ஆகும்.



சிங்கப்பூரில் உள்ள பாலர் பள்ளிகள் முதல் தொடக்கக் கல்லூரிகள் வரை அனைவரும் கற்றல் பயணத்தில் ஈடுபடும் வகையில் எங்கள் நிலைய கற்றல் பயணம் அமைந்திருக்கின்றது.

2024 இல், 18 பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும் எங்கள் நிலைய கற்றல் பயணத்தை மேற்கொண்டனர். அவர்களின் வருகையின் போது பண்பாடு மற்றும் மொழி அடிப்படையிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.



பறை, வீணை போன்ற இந்திய பாரம்பரிய இசைக்கருவிகளும், கபடி போன்ற வீர விளையாட்டுகளும் தமிழரின் அடையாளங்களைப் பறைசாற்றுபவை. இந்நிலையில், பாரம்பரியக் கலைகளையும் விளையாட்டுகளையும் சிங்கப்பூரில் தழைக்க வைப்பதோடு, அவற்றை நம் மாணவர்களுக்கு கொண்டுசேர்க்கும் முயற்சிக்குக் கற்றல் பயணம் ஒரு நல்ல தளமாக அமைந்தது. பறை போன்ற கலை வடிவங்கள் செயல்வடிவில் மாணவர்களுக்குக் காட்டப்பட்டன. மேலும், இசைக்கருவிகளை இசைக்கப் பழகிக்கொள்ளும் நடவடிக்கையில் மாணவர்களின் ஈடுபாடும் மகிழ்ச்சியும் அவர்களின் முகங்களில் மிளிர்ந்தன. அதே சமயம், கபடி விளையாட்டிலும் மாணவர்கள் உற்சாகத்துடன் பங்கெடுத்தனர்.







உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் இடம்பெற்றுள்ள வளமைகளுள் ஒன்று மூலிகைத் தோட்டம். நம் முன்னோர்கள் கண்டறிந்த மூலிகைகளைப் பற்றிய செய்திகளை அறிந்துகொள்வதோடு ஆசிரியர் மாணவர்களுக்கு மூலிகைச் செடிகளின் அருமை பெருமைகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் அறிமுகப்படுத்தினார்.

மெய்ந்நிகர் கற்றல் (VR) நடவடிக்கை மூலம் மாணவர்களுக்கு நம் பண்பாடுகளைப் பற்றி அறிந்து, பங்கேற்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டது. மாணவர்கள் மெய்ந்நிகர் கற்றல் வழியாகக் கலந்துகொண்டாலும் அவர்கள் மிகவும் உற்சாகத்துடன் அனைத்து அங்கங்களிலும் பங்குபெற்றதோடு நம் பண்பாட்டு முறைகள், அதன் முக்கியத்துவம் பற்றிய மேலான புரிதலையும் பெற்றனர். மேலும், கற்றல் பயணம் தாயக்கட்டை, பல்லாங்குழி, ஆடு புலி ஆட்டம், பரமபதம் போன்ற உள்ளரங்க விளையாட்டுகளையும் மாணவர்கள் அறிந்துகொண்டும் அவற்றைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பையும் வழங்கியது.

இக்கற்றல் பயணம், தமிழ்மொழி சிறப்புகளைக் கலையியல் வாயிலாக மாணவர்களுக்கு உணர்த்தும் வண்ணம் புதுமையாக வடிவமைக்கப்பட்டிருந்தது. நம் மாணவர்கள் தமிழர் பாரம்பரியம், பண்பாடு, விளையாட்டுகள், கலைகள், ஊடகம் தொடர்பான செய்திகளையும் அனுபவங்களையும் பெற்றனர். இக்கற்றல் பயணம் மாணவர்களுக்கு இனிய பயணமாக அமைந்து, ஒரு வேறுபட்ட கற்றல் பரிமாணத்தை அவர்களுக்குக் கொடுத்தது என்றே கூற வேண்டும்.





# UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE'S LEARNING JOURNEY

One of the key annual events at our Centre is the Learning Journey, an initiative designed to benefit all Tamil students in Singapore. As the Umar Pulavar Tamil Language Centre (UPTLC) serves as a National Tamil Language Resource Centre, this journey is carefully structured to immerse students in Tamil language, culture, and arts. The primary objective is to help students gain knowledge, experience, and appreciation of Tamil heritage and traditions. Designed to benefit all Tamil students in Singapore, the journey includes various activities related to Tamil language, culture, and arts.

Our educational journey is structured to engage students from kindergarten to junior colleges across Singapore. In 2024, students and teachers from 20 schools participated in our learning journey. During their visit, they engaged in activities centred around culture and language.

Students had an excellent opportunity to learn about traditional Indian musical instruments through this journey. Students were introduced to Parai and Veena, two iconic Indian musical instruments, with hands-on demonstrations. They also learned to play Kabaddi, a traditional Tamil sport, which added excitement and energy to the event. The experience helped students develop an appreciation for these cultural symbols while actively engaging in them.

One of the highlights at UPTLC is its Herbal Garden, showcasing herb plants used by our ancestors. Teachers introduced students to the significance, uses, and benefits of these herbs, fostering curiosity and respect for traditional knowledge.

The Virtual Reality (VR) activities allowed students to learn and participate in our cultural practices. Through VR technology, students explored Tamil cultural heritage in an interactive way. This activity allowed them to participate in cultural practices and gain deeper insights into traditions, making learning both immersive and enjoyable.





Additionally, the journey introduced students to indoor games such as "Thaayakattai," "Pallanguzhi," "Aadu Puli Aatam". Watching the students enthusiastically participate in these activities was delightful. These games helped reinforce critical thinking skills while connecting students to their cultural roots.

The Learning Journey at Umar Pulavar Tamil Language Centre was uniquely designed to blend Tamil language learning with cultural and artistic experiences. Through this journey, students gained exposure to Tamil traditions, arts, games, and enriching their understanding of their heritage. This initiative provided students with a memorable and engaging experience, offering a fresh perspective on learning while deepening their connection to Tamil identity. The learning journey provided a joyful experience for the students and offered them a different dimension of learning.





















# வெளி நாட்டுக் கற்றல் பயணம்

2024ஆம் ஆண்டு தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டத்தின் கீழ் உபகாரச் சம்பளம் பெற்ற தொடக்கக் கல்லூரி மாணவர்களும், தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டத்தில் இணைந்துள்ள உயர்நிலை 3 மாணவர்களும் இணைந்து இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள தஞ்சாவூர் மற்றும் மதுரை மாவட்டங்களுக்குக் கற்றல் பயணம் மேற்கொண்டனர். வகுப்பறைக் கற்றலோடு மட்டும் நிற்காமல், தமிழரின் தொன்மை, மரபு, பண்பாடு, வரலாறு ஆகியவற்றை ஆழமாகக் கற்கவும் புரிந்துகொள்ளவும் பல இடங்களுக்குப் பயணம் செய்தனர். இந்தப் பயணத்தின்மூலம், சங்ககாலம்முதல் இன்றைய காலம் வரையிலான இலக்கியம், பண்பாடு, தொல்லியல், கட்டிடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றைப்பற்றி மாணவர்கள் நேரடியாக அறிந்துகொண்டனர்.

சோழர் காலக் கட்டிடக்கலையை நேரில் பார்த்தும், கீழடி ஆய்வின் மூலம் கண்டெடுக்கப்பட்ட தமிழர்களின் வாழ்வியல் வரலாற்றுச் சான்றுகளை ஆய்வு செய்ததன் மூலம் மாணவர்கள் சிறப்பான அனுபவத்தைப் பெற்றனர். வேளாண்முறையில் பயன்படுத்தப்படும் நவீனத் தொழில்நுட்பங்களைப் அறிந்துகொண்டதோடு, நாட்டுப்புறக் கலைகளான சிலம்பாட்டம், ஒயிலாட்டம், பறையாட்டம் ஆகியவற்றையும் கற்றுத்தேர்ந்தனர்.

மேலும், நம் முன்னோர்கள் பயன்படுத்திய பழங்காலப் பொருட்களைப் பார்வையிட்டதோடு அவற்றின் பயன்பாடு குறித்தும் ஆர்வத்துடன் கற்றுக் கொண்டனர். இந்தக் கற்றல் பயணத்தின் முடிவில், தமிழர்கள் உலகிற்கு விட்டுச்சென்றுள்ள அருட்பெரும் மரபுக் கொடைகள் மாணவர்களுக்குப் பெரும் வியப்பையும் பெருமையையும் ஏற்படுத்தின என்றால் அது மிகையில்லை.

# Learning Journey to Tamil Nadu

In 2024, under the National Elective Tamil Language Programme, students embarked on an overseas learning journey to the Thanjavur and Madurai districts of Tamil Nadu, India.

The students travelled to various historical and cultural sites to deepen their understanding of Tamil heritage, traditions, culture, and history. Through this journey, they gained first-hand insights into Tamil literature, culture, archaeology, architecture, and sculpture spanning from the Sangam era to modern times.

The students explored Chola-period architecture in person and examined archaeological findings from the Keezhadi excavation that reveal aspects of early Tamil civilization. They also learned about agricultural practices and modern technological methods used in farming today.

In addition, the students were introduced to various folk arts such as Silambattam (a traditional martial art), Oyilattam, and Paraiattam, which they enthusiastically learned and practised. They also observed ancient artefacts used by our ancestors and gained an understanding of their functions and historical significance.

By the end of this educational journey, the students were filled with a sense of wonder and pride at the profound cultural and spiritual legacy left behind by the Tamil people – a testament to their enduring contributions to world heritage

















## முன்னாள் மாணவர் சங்கம்

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு உதவிக்கரம் நீட்ட ஓடோடி வரும் முன்னாள் மாணவர்களின் பணி போற்றதலுக்குரியது. அவர்கள் நிலைய நிகழ்வுகளில் உதவி செய்வதோடு, சில நிகழ்வுகளை வழிநடத்தவும் செய்கிறார்கள். அவ்வகையில் நம் நிலைய மாணவர்களுக்குத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மின் விளம்பரங்களைச் செய்வதற்கான பயிலரங்கை ஆகஸ்ட் மாதம் நடத்தினர். அதோடு பொங்கல் விழா, தமிழ்மொழி விழா, பரிசளிப்பு விழா போன்ற விழாக்களுக்கு நம் முன்னாள் மாணவ சங்க உறுப்பினர்கள் ஆதரவு வழங்கிவருகின்றனர். இவ்வாறு நம் நிகழ்வுகள் சிறப்பாக நடந்தேற பலவகைகளில் உதவிபுரிந்து வருவதோடு சில திட்டங்களிலும் தங்களது நிபுணத்துவத்தை வழங்கி உதவி செய்துவருகின்றனர். அவர்களை ஊக்குவிக்கும் விதமாகவும் முன்னாள் மாணவர் சங்க மாணவர்களை ஒருங்கிணைக்கும் விதத்திலும் முன்னாள் மாணவர் சங்க கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் திரளான மாணவர்கள் கலந்துகொண்டு தம் ஆதரவினைத் தெரிவித்தனர்.







## ALUMNI

The dedicated service of our alumni, who come running to extend a helping hand for the events conducted at Umaruppulavar Tamil Language Centre, is truly commendable. Along with assisting in the Centre's programmes, they also take the lead in organizing certain events. In this regard, last August, they conducted a workshop for our students on creating digital advertisements using technology.

In addition, our alumni association members have been providing continuous support for various celebrations such as the Pongal Festival, Tamil Language Festival, and Prize-Giving Ceremony. In many such ways, they have been contributing to the smooth success of our events while also offering their expertise for several projects.
To encourage them further and to bring alumni members together, an alumni association meeting was organized. A large number of alumni participated in the meeting and expressed their support wholeheartedly.










# பெற்றோர்களுக்கான நிகழ்வுகள்



உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் பெற்றோர்களுக்காக இவ்வாண்டு ஏப்ரல் 20-ந் தேதி பயிலரங்குடன் கற்றல் பயணம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்தது. பெற்றோர்களுக்கான இப்பயிலரங்கு கடந்த மூன்று ஆண்டுகளாகத் தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக்குழுவின் நிதியாதரவில் நடத்தப்பட்டு வருகிறது. இன்றைய சூழலில், பிள்ளைவளர்ப்பு பெற்றோர்களுக்கு ஒரு சவால்மிக்கப் பணியாக இருப்பதை நாம் அனைவரும் அறிவோம். அதனைக் கருத்திற்கொண்டு பெற்றோருக்கு உதவும் நோக்கில் பயிலரங்கிற்கும் கற்றல் பயணத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் மூலம், பிள்ளைகளைப் புரிந்துகொண்டு அவர்களை நல்வழிப்படுத்தி நல்ல பிள்ளைகளாகவும் நற்குடிமக்களாகவும் வளர்க்கும் முறைகள் பற்றியும் பிள்ளைகளின் மனநிலை வளர்ச்சியைப் புரிந்துகொண்டு நல்வழிக்காட்டும் முறைகள் பற்றியும் பெற்றோர்கள் ஆழமாக அறிந்து கொண்டனர். தமிழ்மொழியின் மீது பிள்ளைகளுக்கு ஈடுபாட்டை வளர்க்க பெற்றோர்களுக்கு வழிகாட்டப்பட்டது. இதில் 56 பெற்றோர்கள் கலந்துகொண்டார்கள். இந்திகழ்வு அருமையான அர்த்தமுள்ள ஒரு நிகழ்வாக நடந்தேறியதாகப் பெற்றோர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர்.



# Parents Events



Umar Pulavar Tamil Language Center organized a learning journey along with a workshop for parents on April 20 this year. This workshop for parents has been conducted for the past three years with the financial support of the Tamil Language Learning Development Committee.

In today's context, we all know that parenting is a challenging task. Keeping this in mind, the workshop and learning journey were arranged to assist parents.

Through this event, parents gained deep insights into understanding their children, guiding them on the right path, and nurturing them into good individuals and responsible citizens. They also learned methods to understand children's psychological development and guide them effectively. Parents were provided guidance on how to cultivate children's interest in the Tamil language.

A total of 56 parents participated in this event. Parents expressed that the event was meaningful and highly valuable.















# ஆசிரியர்களுக்கான நிகழ்வுகள்
# Teachers Events

Umar Pulavar Tamil Language Centre is committed to empowering its educators through continuous professional growth and holistic well-being initiatives. By offering targeted Staff Training and Professional Learning programs, alongside Staff Welfare activities, the Centre ensures that teachers are equipped with innovative strategies and best practices to enhance student learning. The Centre also celebrates and recognises outstanding contributions through accolades such as the MOE Excellence Awards, Long Service Awards, and the Commendation Medal for National Day, fostering a culture of motivation, collaboration, and professional pride. Through these initiatives, the Centre nurtures a supportive and enriching environment where educators thrive, innovate, and contribute meaningfully to the school community.







# ஊழியர்கள் மேம்பாட்டுப் பயிற்சி

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் ஊழியர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்கு ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு பணி மேம்பாட்டு வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் தொடர்பாகப் பட்டறைகள், கருத்தரங்குகள், அனுபவப் பகிர்வுகள் போன்ற பயிற்சி வகுப்புகள் ஊழியர்களுக்காக நடத்தப்பட்டன. இவை ஊழியர்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு உதவும் என நிலையம் உறுதியாக நம்புகிறது.

பணியாளர்கள் இடையே ஒத்துழைப்பையும் குழு ஒருங்கிணைப்பையும் மேம்படுத்துவதில் நம் நிலையம் நம்பிக்கையுடன் செயல்படுகிறது. நம் நிலையம் தனது பணியாளர்களை இதுபோன்ற வளமான அனுபவங்களின் மூலம் தொழில்முறை வளர்ச்சிக்கு வாய்ப்புகளை வழங்கும் பயிற்சித் திட்டங்களில் கலந்துகொள்வதற்கு உற்சாகப்படுத்துகிறது. இப்படிப்பட்ட கற்றல் அனுபவங்கள் குழுவை ஒன்றிணைத்ததோடு மட்டும் இல்லாமல், அறிவார்ந்த பரிமாற்றத்தையும் ஊக்குவித்து, தனிப்பட்ட மற்றும் குழு முறையிலான முன்னேற்றத்தையும் வலுப்படுத்தும் என நிலையம் ஆழமாக நம்புகிறது.

## STAFF TRAINING

Each year, the Centre offers a range of professional development opportunities to its staff, grounded in the firm belief that workshops, seminars, and experience-sharing sessions are essential in promoting collaboration and teamwork. UPTLC actively encourages its staff to participate in training programs that provide avenues for professional growth through these enriching experiences. The Centre is deeply convinced that such collaborative learning not only unites the team but also fosters the exchange of knowledge, driving both individual and collective progress.









# ஆசிரியர்களுக்கான பயிலரங்குகள்



உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம், தன் நிலைய ஆசிரியர்களின் பணித்திறனை மேம்படுத்தத் தொடர்ந்து தொழில்முறை கற்றல் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. அதன் அடிப்படையில் மார்ச்சு மாதம் வீதி நாடகப் படைப்பாளர், முனைவர் அழகுசெல்வம் அவர்களும் நாடகக் கலைஞர் 'Drama' செல்வம் அவர்களும் ஆசிரியர்களுக்கு 'வீதிநாடகம்வழி மகிழ்வூட்டும் கற்றல்' என்ற தலைப்பில் பயிலரங்கு நடத்தினர். வீதிநாடகமுறையில் கற்றுக்கொள்வதனால் ஆழ்ந்த கற்றலை நோக்கி மாணவர்களை நகர்த்தும் முயற்சி ஆசிரியர்களுக்கு இலகுவாக இருக்கும் என்பதன் அடிப்படையில் இப்பயிலரங்கு நடத்தப்பட்டது. அடுத்த வாரம் தமிழகத்திலிருந்து தமிழ்த் திருவிழாவிற்காக வருகை புரிந்திருக்கும் நாடக, திரைப்பட இயக்குனர் திரு அ அனிஸ் மற்றும் நாட்டுப்புறவியல் ஆய்வாளரும் நாடகப் பயிற்றுவிப்பாளருமாகிய முனைவர் சே. செந்திலிங்கம் அவர்கள் 'நாடகமே (கற்றல்) உலகம்' என்னும் தலைப்பில் ஆசிரியர்களுக்கான பயிலரங்கை வழிநடத்த நிலையம் ஏற்பாடு செய்திருக்கிறது.

பிப்ரவரி மாதம், முனைவர் சந்தன்ராஜ், அண்டர்சன்-சிராங்கூன் தொடக்கக் கல்லூரியின் அழைப்பை ஏற்று, உயர்தரம் 1 மற்றும் 2-இல் பயிலும் மாணவர்களைச் சந்தித்து, "நம் வேர்கள்: எதிர்கால வரலாற்றுக் கதைகளுக்கான மொழியையும் பண்பாட்டையும் புரிந்துகொள்வதில் தமிழ் இளையர்களின் பயணம்" என்னும் தலைப்பில் உரையாற்றினார். மாணவர்கள் பல்வேறு கேள்விகளைக் கேட்டும் தம் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டும் கலந்துரையாடலைச் சுவைபட நகர்த்திச் சென்றனர் . ஆசிரியரும் அதற்கேற்ப ஆதாரங்களுடன் அனுபவங்களையும் இணைத்துக் கலந்துரையாடலை வழிநடத்தினார்.

மேலும், ஆசிரியர் மேம்பாட்டகத்தோடு இணைந்து, நமது ஆசிரியர் முனைவர் சந்தன்ராஜ், வழிகாட்டு ஆசிரியர் திருமதி ருக்மணியுடன் இணைந்து, 'எதிர்காலத் தயார்நிலைக்குரிய கற்போரின் 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களை வளர்த்தல்' என்னும் வலையரங்கில், பகிர்ந்துகொண்டார். மேம்படுத்தப்பட்ட தொழில் முறை கற்றல் திட்டத்தின் கீழ், தமிழாசிரியர்களின் தமிழ் இலக்கண அறிவை ஆழப்படுத்துதல் என்ற தலைப்பையொட்டி, செயல்படும் குழுவில் மூத்த ஆசிரியர் திருமதி சுமதி உறுப்பினராக உள்ளார். மேலும், பாடத் தலைவர், செல்வி சீதா அவர்கள் தெற்குக் குழும ஆசிரியருடன் இணைந்து 'மின்வழி மதிப்பீட்டிற்குரிய தேர்வுத்தாள் அமைப்புமுறைப் பயிலரங்கு' ஒன்றை நடத்தினார். நல்லதொரு வரவேற்பையும் அப்பயிலரங்கு பெற்றிருந்தது. இப்பயிலரங்கில் கலந்துகொள்ள இயலாத சில ஆசிரியர்களின் விண்ணப்பத்திற்கு இணங்க மீண்டும் ஒருமுறை, இப்பயிலரங்கு பாடத்தலைவரால் நடத்தப்பட்டது. நிலைய ஆசிரியர்களின் பணிமேம்பாட்டிற்காகப் பல முயற்சிகளை மேற்கொள்ளும் நிலையம் அவர்களது நலனையும் கருத்திற்கொண்டு செயற்படுகின்றது.



# Professional Learning Initiatives



The Umar Pulavar Tamil Language Centre (UPTLC) has been consistently implementing professional learning programmes to enhance the teaching effectiveness and professional skills of its teachers.

In March, a workshop titled "Joyful Learning through Street Theatre" was conducted for teachers by Dr. Alaguselvam, a street play creator, and Mr. 'Drama' Selvam, a theatre artist. The workshop was organised with the view that learning through the street theatre approach would help teachers engage students more deeply and move them towards meaningful learning experiences. Next week, in conjunction with the Tamil Festival, the Centre has arranged another workshop titled "Theatre – A World of Learning", to be facilitated by Mr. A. Anees, a drama and film director from Tamil Nadu, and Dr. S. Senthilingam, a folklorist and theatre trainer.



In February, Dr. Sandhanraj accepted an invitation from Anderson-Serangoon Junior College to address the students of JC1 and JC2 on the topic "Our Roots: The Journey of Tamil Youths in Understanding Language and Culture for the Stories of the Future." The students actively participated in the session by asking thought-provoking questions and sharing their views. The speaker responded with evidence-based insights and personal experiences, enriching the discussion further.

In collaboration with the Academy of Singapore Teachers (AST), Dr. Sandhanraj, together with lead teacher Mrs. Rukmani, also shared at a webinar titled "Developing 21st-Century Skills for Future-Ready Learners."



As part of the Enhanced Professional Learning (EPL) initiative, a working group focusing on "Deepening Tamil Teachers' Knowledge of Tamil Grammar" includes senior teacher Mrs. Sumathi as a member.

Additionally, ICT Subject Head Ms. Seetha, along with a teacher from the South Zone, conducted a workshop on "Constructing Online Assessment Papers." The workshop was well received by participants. Due to requests from teachers who were unable to attend the first session, the workshop was conducted again.

The Umar Pulavar Tamil Language Centre continues to undertake various initiatives for the professional growth and well-being of its teachers, reaffirming its commitment to fostering excellence in Tamil language education.




# பணியாளர் நலன்குழு நடவடிக்கைகள்

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் ஊழியர்களுக்கு இடையிலான சுமூகமான உறவுகளை ஏற்படுத்திக்கொடுக்கவும் மகிழ்ச்சிகரமான பணிச் சூழலையும் ஒன்றிணைந்து செயல்படும் பண்பை மேம்படுத்துவதையும் தம் தலையாயக் கடமையாகக் கொண்டுள்ளது. 2024-ஆம் ஆண்டில், பணியாளர் நலன் குழு (SWC) குழுவிணைப்புச் செயல்பாடுகளில் ஈடுபட்டது. அவற்றின்வழி பணியாளர்கள் அனைவரின் பிறந்தநாளை ஒவ்வொரு மாதமும் கொண்டாடியும், ஆசிரியர் தினக் கொண்டாட்டம், தேசிய தினக் கொண்டாட்டம், தீபாவளி, நோன்புப் பெருநாள், சீனப் பெருநாள் எனப் பல கொண்டாட்டங்களையும் ஏற்பாடு செய்திருந்தது. மேலும், நிலையத்தின் உள்ளரங்கிலே குறும்படங்கள் பார்த்தும், செந்தோசாத் தீவில் மெய்ந்நிகர் அனுபவத்தைப் பெற்றும் நம் நிலையப் பணியாளர்கள் அனைவரும் குதூகலமாகக் பொழுதைக் கழித்தனர். முக்கியமாக, பட்டறைகள், கலந்துரையாடல்கள், கற்றல் கற்பித்தல் தொடர்பான சிறந்த பகிர்வுகள் மற்றும் ஊழியர்களின் ஒற்றுமையையும் தொடர்பையும் வலுப்படுத்தும் பல அங்கங்களை ஏற்படுத்தியதில் பெருமையும் கொண்டுள்ளது.

2024-ல், Staff retreat சிந்தனை கொண்ட ஒன்றுகூடலாக இருந்ததோடு, மாறுபட்ட அணுகுமுறையுடனும் நடைபெற்றது. இந்த ஆண்டில், அண்டை நாடான ஜொகூர் பாருவுக்குப் பயணித்து ஓர் அர்த்தமுள்ள, மகிழ்ச்சியான அனுபவத்தைப் பெற்றது. அக்டோபர் 24-25 ஆம் தேதிகளில் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் ஊழியர்கள் அனைவரும் துன் அமினா தமிழ்ப் பள்ளிக்குச் சென்று கற்றல் பயணத்தைத் தொடங்கி சவான்னா ஹில்ஸ் ரிசார்ட்டில் தொடர்ந்து பல்வேறு பரிமாற்றங்கள், குழுத்தலைமையாளர் கருத்தாக்கங்கள், கருத்தரங்குகள் மற்றும் குழு ஒத்துழைப்புப் பணிகளில் ஈடுபட்டுப் பயன் பெற்றனர்.



# SWC Activities



With the goal of fostering harmonious relationships and a collaborative, joyful work environment, Umar Pulavar Tamil Language Centre (UPTLC) celebrated employee birthdays monthly and actively engaged staff in various festivities, including Teacher's Day, National Day, Deepavali, Hari Raya, and Chinese New Year. These celebrations took place both within the Centre—through activities such as short film screenings—and beyond, with thrilling experiences like a virtual reality adventure at Sentosa Island, creating memorable moments for all.

In 2024, the Staff Welfare Committee (SWC) proudly led numerous initiatives to strengthen staff unity and professional engagement. These included team-building activities, workshops, discussions on best teaching practices, and multiple platforms to foster collaboration. Fun bonding sessions such as Karaoke, movie screenings, VR experiences, and bowling further nurtured camaraderie among colleagues.

This year's staff retreat adopted a fresh approach, blending indoor and outdoor experiences. The team traveled to Johor Bahru for a meaningful and enjoyable learning journey, visiting Tun Aminah Tamil School, followed by enriching sessions at Savanna Hills Resort on October 24–25, 2024. Activities included knowledge exchanges, brainstorming sessions, workshops, and team-building exercises, offering staff opportunities to connect personally and strengthen collaboration. UPTLC firmly believes that such initiatives are vital in cultivating a supportive and cooperative culture, enhancing morale, boosting productivity, and creating a positive and vibrant work environment for all.











# பிரியா விடை

நமது நிலையத்தில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து தற்போது வேறு உயர்நிலைப் பள்ளிக்கு மாற்றலாகிச் சென்றிருக்கின்ற திருவாட்டி நுசைபா அவர்களுக்கும் சிங்கப்பூர் தேர்வு மற்றும் மதிப்பீட்டுக் கழகத்திற்குச் சென்றிருக்கின்ற திரு சந்தன்ராஜ் அவர்களுக்கும் எங்களது உளமார்ந்த நன்றியையும் வாழ்த்தையும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் நமது நிலையத்தில் செயல்பாட்டு ஆதரவுப் பணியாளர்களாய் இருந்த திருமதி பாஃத்தினியும் திரு மார்க்கும் வேறு இடங்களுக்கு மாற்றலாகிச் செல்கின்றனர். இதுவரை நம் நிலையத்தில் பணிபுரிந்து பங்களித்த இவர்களுக்கு, நிலையம் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அவர்களுக்குப் பிரியா விடை அளித்தது.






# Farewell

We would like to take this opportunity to express our heartfelt gratitude and best wishes to Ms. Nuzaiba, who has served as a Tamil teacher at our Centre and has now been transferred to another secondary school, and to Mr. Santhan Raj, who has moved on to the Singapore Examinations and Assessment Board.

We would also like to extend our appreciation to Mrs. Fatini and Mr. Mark, our operations support staff, who will be transferring to other locations. The Centre sincerely thanks all of them for their dedicated service, unwavering commitment, and valuable contributions during their time with us. We wish them every success in their future endeavours.







# கல்வி அமைச்சின் சேவைக்கான விருதுகள்



Mdm Bathma



Mr Anbazhagan



Dr Santhanraj

கல்வி அமைச்சின் சேவை சிறப்புத் தகைமையாளர் விருது (MSEA) என்பது சிங்கப்பூர் கல்வி அமைச்சு வழங்கும் பெருமைக்குரிய விருதாகும். இது, சிறந்த சேவையின்மூலம் தங்கள் சக பணியாளர்களை ஊக்குவிக்கும் கல்வி அமைச்சு பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்விருது C.A.R.E. (Courtesy, Accessibility, Responsiveness, Effectivenes□) போன்ற அடிப்படை மதிப்புகளை முன்னிலைப்படுத்தி, ஆர்வத்துடனும் தொடர்ந்து சிறந்த சேவையாற்றி வருவோரை கௌரவிக்கும் வகையில் வழங்கப்படும் விருதாகும்.

எங்கள் பள்ளி ஆசிரியர்களான முனைவர் சந்தன்ராஜ் கோவிந்தசாமி, திரு அன்பழகன் தனராஜ் மற்றும் நமது பொது அலுவலக ஊழியரான திருமதி பத்மா ஆகியோர் 2024 ஆம் ஆண்டில் □□□ சேவை சிறப்புத் தகைமையாளர் விருதை பெற்றுள்ளனர் என்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.

மேலும் நமது ஆசிரியர் திரு சீதாராமன் அவர்கள் மதிப்புமிக்க உன்னத விருதான தேசிய தினநாள் பாராட்டுப் பதக்கத்தினையும் நமது நிலையத்தின் துறைத்தலைவரான திரு சரவணன் அவர்கள் நீண்டகால சேவைக்கான விருதையும் இந்த ஆண்டில் பெற்றனர்.

அவர்களின் அர்ப்பணிப்பும், சேவையில் வெளிப்படும் சிறப்பும் பள்ளி சமூகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது.



# Ministry of Education Service Awards



Mr Seetharaman



Mr Saravanan

The MOE Service Excellence Award (MSEA) is a prestigious award presented by the Singapore Ministry of Education. It is given to MOE staff who inspire their colleagues through exemplary service. This award recognises individuals who consistently deliver outstanding service, guided by core values such as C.A.R.E. (Courtesy, Accessibility, Responsiveness, Effectiveness).

We are proud that our school teachers, Dr. Santhan Raj Govindasamy and Mr. Anbalagan Thanaraj, as well as our administrative staff Mrs. Padma, received the MOE Service Excellence Award in 2024.

In addition, our teacher Mr. Seetharaman was honoured with the prestigious Commendation Medal for National Day, and our Centre Head of the department Mr. Saravanan received the Long Service Award this year. Their dedication and outstanding service have brought pride to our school community.

uptlc_official

@uptlc.offlcial

@MyUPTLC

உள்ளத்தனையது உயர்வு

